விலை: 50.00
பக்கங்கள் - 16

Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com


சங்கு 27
ஒலி 070 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 15 வெள்ளிக்கிழமை (27.02.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தராக பேராசிரியர் வேல்நம்பி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புதிய துணை வேந்தராக சிரேஷ்ட பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பிஜனாதிபதியால்தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.



புத்தூரைச் சேர்ந்த இவர் 15ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதச் சட்டங்களுக்கு எதிரான கையொப்பங்கள்

### நீதி அமைச்சிடம் இன்று சமர்ப்பிப்பு

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச்சட்டம் மற்றும் அரசினால் கொண்டுவரப் படவுள்ள புதிய சட்டம் ஆகியவற் றுக்கு எதிராக வடக்கு - கிழக்கு மாகாணங்களில் சேகரிக்கப்பட்ட கையொப்பங்கள் இன்று வெள்ளிக் கிழமை நீதியமைச்சிடம் சமர்ப் பிக்கப்படவுள்ளது.

கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக வடக்கு கிழக்கின் பல் வேறு பகுதிகளில் பயங்கரவாத தடைச்சட்டம் மற்றும் அரசினால் கொண்டு 15ஆம் பக்கம் பார்க்க

## வனவளத் திணைக்களத்தால் வவுனியாவில் 293 குடும்பங்களின் பூர்வீக காணிகள் சுவீகரிப்பு

### ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டத்தில் சுட்டிக்காட்டு

*(வவுனியா)*

வவுனியா மாவட்டத்தில் 293 குடும்பங்களின் பூர்வீகக் காணிகள் வனவளத் திணைக்களத்தால் சுவீகரிக்கப்பட்டுள்ளதாக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. *(04ஆம் பக்கம் பார்க்க)*

## கச்சதீவு திருவிழா இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலய வருடாந்த பெருந்திருவிழா இன்று (27) ஆரம்ப மாகவுள்ளது.

இரண்டு நாட்கள் இடம்பெறும் இந்தத் திருவிழாவில் பங்கேற்கும் 15ஆம் பக்கம் பார்க்க

## முல்லை வட்டுவாகலில் மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வட்டுவாகல் பாலத்தருகில் மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த வேலு செந்தில்நாதன் (வயது-45) 15ஆம் பக்கம் பார்க்க

## பழசும் வேண்டாம்; புதுசும் வேண்டாம்

### பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராக யாழில் நாளை பாரிய பேரணிக்கு ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பழசும் வேண்டாம் புது சும் வேண்டாம்எனும்தொனிப் பொருளில் பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் நாளை மாபெரும் போராட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்த போராட்டமானது யாழ்.பொது நூலகத்திற்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டு பேரணியாக வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் வரை சென்று நிறைவடையவுள்ளது.

தாயகச் செயலணியின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இப்போராட்டத்தில் கட்சி பேதங்கள் இன்றி அரசி யல் கட்சிகள் பொது அமைப் புக்கள், பொதுமக்கள் என 15ஆம் பக்கம் பார்க்க

## பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வேண்டும்

### வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத் தடைச் சட்டம் முழுமையாக நீக்கப் பட வேண்டும் எனவும் தற் போது அரசினால் முன் மொழியப்பட்டுள்ள புதிய சட்டம் அமுல்படுத்தக் கூடாது எனவும் வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டுள் ளது.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் சபை அமர்வு, 15ஆம் பக்கம் பார்க்க

## சிங்கள மொழியில் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக்கூட்டம் சபையில் சலசலப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்ட அபி விருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று நடை பெற்றது.

கூட்டத்தின்போது நீண்ட நேரமாக மொழிபெயர்ப்பின்றி தனிச் 16ஆம் பக்கம் பார்க்க

## மதவாச்சியில் பஸ் மோதி பெண் மரணம்

(மதவாச்சி)

யாழ்ப்பாணம் ஏ9 பிர தான வீதியின் மதவாச்சி நகரில் பஸ் மோதியதில் பெண்ணொருவர் உயிரி ழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்று 15ஆம் பக்கம் பார்க்க

## அனர்த்தப் பணிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகள் இன்று முதல் தொழிற்சங்க நடவடிக்கை

(கொழும்பு)

அனர்த்த நிவாரணப் பணி களில் ஈடுபட்டுள்ள அரச சேவை அதிகாரிகளின் பல தொழிற்சங்கங்கள் இன்று (27) முதல் அப்பணிகளிலிருந்து விலகி தொழிற்சங்க நட வடிக்கையொன்றை ஆரம் பிக்கத் தீர்மானித்துள்ளன.

அகில இலங்கை அனர்த்த நிவாரண சேவைகள் தொழிற் சங்கம், தொழில்நுட்ப உத்தி யோகத்தர்கள் தொழிற்சங் கம் 04ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# NEW SCIENCE HALL
KANNATHIDDY ROAD JAFFNA

**2028 A/L கணித உயிரியல் பிரிவுகள்**
நேரடி வகுப்புக்கள் மற்றும் நிகழ்நிலை வகுப்புக்கள்

**தமிழ்மொழி மூலம்**

PHYSICS
திரு. N.கபிலன்
திரு. G.பிரபா
திரு. R.ராகுலன்

CHEMISTRY
திரு. G.BENO
திரு. S.ரதுசன்

BIOLOGY
திரு. K.இராகவன்
திரு. R.குகானந்தன்

COM.MATHS
திரு. P. செந்தில்நாதன்
திரு. V.S. சிவகரன்

AGRICULTURE
திரு. K. அரசிளங்குமரன்

**ENGLISH MEDIUM**

PHYSICS
MR.M.KUGANESWARAN
MR.R.RAAKULAN

CHEMISTRY
MR.G.BENO

BIOLOGY
MR.V.S.GUNASEELAN
MR.R.KABIL

COM.MATHS
MR.P.SENTHILNATHAN
MR.V.S.SIVAKARAN

அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

(C-5070)

**ஆரம்பம் : 02.03.2026**
நிகழ்நிலை வகுப்புகளுக்கு சகல மாவட்டங்களிலும் இருந்து இணைந்து கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : 076 566 3006, 076 569 3006, 077 791 7611
https://Facebook.com/ New Science hall


# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்.
**செல்லையா சிவதாசன்**
(சன்லைற் டிறைகிளீனர்ஸ் முகாமையாளர்)

உம்மை நினைக்கும் பொழுது
உம் இழப்பின் வலியும்
உம் சிரிப்பின் இனிமையும்
எம்முன் கலக்கிறது
உம் கைபிடித்து நாம் இப்போது
நடப்பதில்லை என்றாலும்
உம் நம்பிக்கையும் உம் ஆசிகளும்
எப்போதும் எம்மோடு உண்டு.


தோற்றம் 24.02.1959 மறைவு 05.03.2020

(6933)

புங்கன்குளம்,
அரியாலை.

குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 03.05.1940 மறைவு 25.02.2026


எமது கல்லூரியின் உபஅதிபர்
**திரு.திருஞானம் லின்ரஸ்**
அவர்களின் அன்புத் தாயார்
அமரர் **மேரி கெலன் ஜெயசீலி திருஞானம்**
அவர்கள் 25.02.2026 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினரின் துயரில் பங்கு கொள்வதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத் துயரில் பங்கு கொள்ளும்
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/ யாழ்ப்பாணம் இந்து
மகளிர் கல்லூரி.

(C-5066)

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 04 - 1951



மறைவு 25 - 02 - 2026

## கந்தையா தம்பிஐயா

புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா தம்பிஐயா அவர்கள் (25.02.2026) புதன்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் லோகேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் தர்சினி (கனடா), கிருஷ்ணானந்தி, தர்சிகா (கனடா), கீர்த்திகா (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும் சதீஸ்சன் (கனடா), தர்ஷன் (கனடா), பாலமுரளி (கனடா), திவாகர் (KMT - கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி, கண்ணம்மா மற்றும் தங்கலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற தம்பிராசா மற்றும் கிருஸ்ணமதி, விநாயகமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் காலஞ் சென்றவர்களான இராசலிங்கம், கனகலிங்கம், அமுதலிங்கம், பஞ்சலிங்கம் மற்றும் சண்முகலிங்கம், நாகேஸ்வரி (லண்டன்), இராஜேஸ்வரி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் செல்லம்மா (லண்டன்), தனலட்சுமி (கனடா), மாலா (லண்டன்), கந்தசாமி (லண்டன்), நந்தகுமார் (லண்டன்) ஆகியோரின் சகலனும் டிவ்வியா, சந்தியா, சஞ்ஜீவ், றொசான், ஸ்ரீஅனிஸ்ரன், பிருத்வின், மகத்மிகா, வைபவி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2026) வெள்ளிக்கிழமை மதியம் ஒரு மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.11, முதலியார் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(6926)

தகவல் : குடும்பத்தினர்
077 522 1171

# அந்தியேட்டி அழைப்பும்
# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்





அமரர் **சின்னட்டி தெய்வேந்திரன்**
(ஓய்வுநிலை விசாரணை உத்தியோகத்தர் CTB)

தோற்றம் 17.08.1949 | மறைவு 29.01.2026

அமரர் **தெய்வேந்திரன் பகீசன்**

தோற்றம் 06.05.1989 | மறைவு 20.02.2016

அமரர் **சின்னட்டி தெய்வேந்திரன்** அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 28.02.2026 சனிக்கிழமை அதிகாலை 5.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் அஸ்தி கரைக்கப்படும். அதனைத் தொடர்ந்து அன்னாரின் இல்லத்தில் நண் பகல் 12.00 மணியளவில் நடைபெறும் சபிண்டீகரண கிரியையிலும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

'தாரணி'
இமையாணன் கிழக்கு,
உடுப்பிட்டி.

(6932)

இங்ஙனம்:-
குடும்பத்தினர்
077 997 9659

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணில்- இந்தியத் தூதுவர் திடீர் சந்திப்பு
## அரசியல் வட்டாரங்களில் பரபரப்பு

**(கொழும்பு) இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக் கிரமசிங்கவை நேரில் சந்தித்துக் க லந்துரையா டியுள்ளார். இது அரசியல் வட்டாரங்களில் பேசுபொருளாக மாறியுள்ளது.**



கொழும்பு, பிளவர் வீதியில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

எதிர்க்கட்சிகள் அனைத்தையும் ஒரே அணியின் கீழ் கொண்டு வருவது தொடர்பாக, எதிர்க்கட்சியைச் சேர்ந்த சில அரசியல்வாதிகள், முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தனர்.

இந்தப் பேச்சு முடிவடைந்தவுடனேயே இந்தியத் தூதுவர் அவரைச் சந்தித்தமை அரசியல் அரங் கில் முக்கியத்துவம் வாய்ந்ததாகப் பார்க்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதிக்கும் இந்தியத் தூதுவருக்கும் இடையில் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்கள் குறித்த உத்தியோக பூர்வத்தகவல்கள் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

எனினும், தற்போதைய அரசியல் சூழல் மற்றும் இரு தரப்பு உறவுகள் குறித்து இதன் போது ஆராயப்பட்டிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. (நி)

# தேர்தல் சட்டங்களில் திருத்தம்
## தேர்தல்கள் ஆணைக்குழு ஆலோசனை




(கொழும்பு) இலங்கையின் தேர்தல் முறையைச் சீரமைக்கும் நோக்கில், தேர்தல் சட்டங்களில் திருத்தங்களைக் கொண்டுவருவது தொடர்பில் ஆலோசித்து வருவதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்தத் திருத்த முன்மொழிவுகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், அரசியல் கட்சிகளின் செயலாளர்கள் மற்றும் தேர்தல் கண் காணிப்பாளர்களுடன் கலந்துரையாடப்படவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதனையடுத்து, அது தொடர்பில் இறுதித் தீர்மானம் எட்டப்படும் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார். (நி)

# அவசரகால சட்டத்திற்கு எதிரான மனுக்களை தள்ளுபடி செய்தது உயர்நீதிமன்றம்

(கொழும்பு) "டித்வா" சூறாவளி அனர்த்தத்தைத் தொடர்ந்து, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவினால் பிறப்பிக்கப்பட்ட அவசரகாலச் சட்ட ஒழுங்கு விதிகள் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகக் கூறித் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளாமலேயே தள்ளுபடி செய்ய உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

இந்த மனுக்கள் மீதான பரிசீலனை நேற்று மேற்கொள்ளப்பட்டது.

நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான மூவர் அடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் இந்தத் தள்ளுபடி உத்தரவைப் பிறப்பித்தது. (நி)

# 10, 11 ஆம் தரங்களுக்கான ICT பாடத்திட்டம் மறுசீரமைப்பு

(கொழும்பு) இலங்கை கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சானது 10 மற்றும் 11 ஆம் தர மாணவர்களுக்கான தகவல் மற்றும் தொடர் பாடல் தொழில்நுட்ப பாடத் திட்டத்தில் விசேட மறு சீரமைப்புகளை மேற் கொண்டுள்ளது.

2027 ஆம் ஆண்டில் தரம் 6 இற்கும் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில், தற்போதைய தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப 10 மற்றும் 11 ஆம் தரங்களுக்கான பாடத் திட்டத்தை உடனடியாகப் புதுப்பிப்பது அவசியம் என அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, 2015 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்த பாடத் திட்டத்தின் சில தேர்ச்சி மட்டங்கள் மற்றும் பாடப் பரப்புகள் தற்காலத் தேவைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, 2027 ஆம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களும் அதற்குப் பின்னரான மாணவர்களும் இந்த புதிய மறுசீரமைக் கப்பட்ட பாடத் திட்டத்தின் அடிப்படையிலேயே பரீட்சை வினாத் தாள்களை எதிர்கொள்ள நேரிடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மறுசீரமைக்கப்பட்ட இந்த புதிய பாடத்திட்டத்தை தேசிய கல்வி நிறுவகத்தின் அதிகாரப் பூர்வ இணையத்தளமான www.nie.ac.lk அல்லது கல்வி அமைச்சின் இணையதளமான www.moe.gov.lk ஊடாகப் பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

அத்துடன், கல்வி வெளியீட்டுத் திணைக் களத்தினால் இந்த மாற்றங்களுக்கு இணங்க புதிய பாடப்புத்தகங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இவை விரைவில் அச்சிடப்பட்டு பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படும் என எதிர் பார்க்கப்படுகிறது.

# சுரேஸ் சலேவின் வங்கிக் கணக்குகளை ஆய்வு செய்ய சி.ஐ.டி தீர்மானம்!
## தீவிரமாகும் விசாரணைகள்



(கொழும்பு) குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்ட, அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் பணிப்பாளர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் துவான் சுரேஷ் சலே பயன்படுத்திய கணனிகள், கையடக்கத் தொலைபேசிகள், மின்னஞ்சல் தகவல்கள் மற்றும் அவரது வங்கி கணக்குகளை விரிவாக ஆய்வு செய்யப் புலனாய்வாளர்கள் தீர்மானித்துள்ளனர்.

2019 ஏப்ரல் 21 இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்களுக்குச் சதி செய்தமை மற்றும் அதற்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பேலியகொட பகுதியில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றிற்கு நேற்று முன்தினம் காலை 8.10 மணியளவில் சுரேஷ் சலே பணிக்குச் சென்று கொண்டிருந்த போதே, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் விசேட அதிகாரிகள் குழுவினால் அவர் மடக்கிப் பிடிக்கப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட அவரைத் தொடர்ந்து சி.ஐ.டி தலைமையகத்திற்கு அழைத்துச் சென்ற அதிகாரிகள், பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் 72 மணிநேர தடுப்புக் காவல் உத்தரவைப் பெற்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான முக்கிய தகவல்கள் அவருக்கு முன்கூட்டியே தெரிந்திருந்ததா? தெரிந்திருந்தும் அவர் அதனை உரிய தரப்பினருக்கு அறிவிக்காமல் மறைத்தாரா? என்பது குறித்து விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

பிரித்தானியாவின் "சனல்-4" ஆவணப்படத்தில் அசாத் மௌலானா வெளியிட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில், ராஜபக்ஷவினரை மீண்டும் ஆட்சிக்குக் கொண்டுவரத் தவ்ஹீத் ஜமாத் உறுப்பினர்களுடன் இணைந்து சதி செய்தாரா என்பது குறித்தும் விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

ஏற்கனவே இத் தாக்குதல் தொடர்பாக நௌபர் மௌலவி உள்ளிட்ட 25 பேருக்கு எதிராகக் கொழும்பு மேல்நீதிமன்றில் வழக்கு நடைபெற்று வருகின்றது.

இவ்வாறான நிலையில், கோட்டை நீதவான் நீதிமன்றில் சி.ஐ.டியினர் சமர்ப்பித்த இரகசிய அறிக்கைகளின் தொடர்ச்சியாகவே இந்த அதிரடி கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

சுரேஷ் சலேயின் கைதினைத் தொடர்ந்து, இத் தாக்குதலுடன் தொடர்புடையதாகக் கருதப்படும் மேலும் சில முக்கிய மற்றும் பலம்வாய்ந்த நபர்கள் குறித்தும் குற்றப் புலனாய்வுத் திணைக் களம் தீவிர விசா ரணைகளை முன்னெடுத்து வருவதாகத் தகவல்கள் தெரி விக்கின்றன. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘ராசியான’ ஆமதாபாத்தில் மே.தீவுகளை ‘ஈசியாக’ வென்றது தென்னாபிரிக்கா

## அரையிறுதி வாய்ப்பும் பிரகாசம்

ரி20 உலகக் கிண்ண சுப்பர்-8 போட்டியில் அணித் தலைவர் மார்க்ரம் 82 ஓட்டங்களை விளாச, ராசியான ஆமதாபாத்தில் தென்னாபிரிக்கா ஈசியா மேற்கிந்தியத் தீவுகள் அணியை 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வென்றது.

ஆமதாபாத்தில் உள்ள மோடி மைதானத்தில் நடந்த ரி20 உலக கிண்ண சுப்பர் 8 போட்டியில் (பிரிவு-1) தென்னாபிரிக்கா - மே.தீவுகள் அணிகள் மோதின.

நாணயச்சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணித் தலைவர் மார்க்ரம் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

**விக்கெட் சரிவு:**

மே.தீவுகள் அணிக்கு ஷாய் ஹோப் (16), பிரண்டன் கிங் (21) ஜோடி சுமாரான ஆரம்பம் கொடுத்தது. ரபாடா பந்தில் ஷிம்ரன் ஹெட்மயர் (2) ஆட்டமிழந்தார். நிகிடி வேகத்தில் ராவ்மன் பாவெல் (9), ராஸ்டன் சேஸ் (2) வெளியேறினர். கார்பின் பாஷ் பந்தில் ஷெர்பேன் ரூதர்போர்ட் (12), மத்யூ போர்டு (11) ஆட்டமிழந்தனர். மே.தீவுகள் அணி 10.2 ஓவரில் 83/7 ஓட்டங்கள் எடுத்து திணறியது.

**சுப்பர் ஜோடி:** பின் இணைந்த ஜேசன் ஹோல்டர், ஷெப்பர்ட் ஜோடி விக்கெட் சரிவிலிருந்து அணியை மீட்டது. நிகிடி, கேஷவ் மகாராஜ், பாஷ், ரபாடா பந்தில் தலா ஒரு சிக்சர் அடித்தார் ஷெப்பர்ட். மார்கோ யான்சென் வீசிய 18வது ஓவரில் 2 சிக்சர், 2 பவுண்டரி உட்பட 23 ரன் விளாசினார் ஹோல்டர். எட்டாவது விக்கெட்டுக்கு 89 ஓட்டங்கள் சேர்த்த போது ஹோல்டர் (49 ஓட்., 3X6, 4X4) "ரன்-அவுட்" ஆனார். பாஷ் வீசிய கடைசி பந்தை பவுண்டரிக்கு அனுப்பிய ஷெப்பர்ட் அரைச்சதம் கடந்தார்.

மே.தீவுகள் அணி 20 ஓவரில் 8 விக்கெட்டுக்களை 176 ஓட்டங்களை




எடுத்தது. ஷெப்பர்ட் (52 ரன், 4X6, 3X4) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

**மார்க்ரம் விளாசல்:** எட்டக்கூடிய இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணிக்கு அணித் தலைவர் மார்க்ரம், குயின்ரன் டி கொக் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. இருவரும் சிக்சர், பவுண்டரிகளாக விளாச, பவர்-பிளே ஓவரின் (1-6) முடிவில் 69/0 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

ஹோல்டர் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய மார்க்ரம் வெற்றியை உறுதி செய்தார். தென்னாபிரிக்க அணி 16.1 ஓவரில் ஒரு விக்கெட்டை இழந்து 177 ஓட்., எடுத்து வெற்றி பெற்றது. மார்க்ரம் (82 ரன், 4X6, 7X4), ரிக்கிள்டன் (45 ரன், 2X6, 4X4) அவுட்டாகாமல் இருந்தனர். குயின்ரன் 47 ஓட்டங்கள் எடுத்தார்.

ஆட்ட நாயகன் விருதை மார்க்ரம் வென்றார். சுப்பர்-8இல் தொடர்ந்து 2வது வெற்றியை பதிவு செய்த தென்னாரிக்காவின் அரையிறுதி வாய்ப்பு பிரகாசமடைந்தது. (ம-7)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற இரத்தினசாமி சாஸ்திரியார் அவர்கள் யாழ்.வருகை, ஜாதகம், கைரேகை, எண்கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, வெளிநாடு செல்லத்தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் நேரில்.

(C-5068)

074 196 4945

இல.90, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


# மரண அறிவித்தல்

## திருமதி க.மேரி அன்ரோனியா யோகராணி



இல.65, டேவிற் வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி மேரி அன்ரோனியா யோகராணி அவர்கள் கடந்த 24.02.2026ஆம் திகதியன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான லீனப்பு - மேரி ஜேட்றூட் தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கந்தவனம் (இளைப்பாறிய பொது சுகாதார பரிசோதகர்) அவர்களின் அன்பு மனைவியும் யேசுதாசன் (லண்டன்), பொளின் திரேசா (கனடா), காலஞ்சென்ற றொபினா மற்றும் அருள்தாசன் (நியூசிலாந்து), மெரினா (நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சுரேஷ் (சுவிஸ்), பிறியந்தி (ஜேர்மனி), துஷ்யந்தி (ஜேர்மனி), உதயந்தி (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் - ஆளுநர் செயலகம் - வட மாகாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் நிர்மலி (சுவிஸ்), அமலதாசன் (ஜேர்மனி), றெமிஜியஸ் (ஜேர்மனி), றொபின்சன் (ஆசிரியர் - யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை, கௌரவ உறுப்பினர் - யாழ்.மாநகர சபை) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆஷ்லி (சுவிஸ்), றயன் (ஜேர்மனி) பிருந்தா (ஜேர்மனி), ஜீனா (ஜேர்மனி), சாமுவல் (ஜேர்மனி), அஸ்ரல் (ஜேர்மனி), லௌறின் (ஜேர்மனி), டெனோவன், டெனுக்கா, டெறிக்கா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் காலஞ்சென்றவர்களான இரத்தினராசா, அனி, சவேரியன் மற்றும் சிறில் (கனடா), வசந்தி (நியூசிலாந்து), யோகேந்திரன் (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 27.02.2026ஆம் திகதி இன்று பிற்பகல் 2.45 மணியளவில் அன்னாரின இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு புனித மரியன்னை பேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

இல.65, டேவிற் வீதி,
யாழ்ப்பாணம்.

(6935)

தகவல்:
குடும்பத்தினர்

## அதிகாரிகள்...

மற்றும் கிராம உத்தியோகத்தர்கள் தொழிற் சங்கம் ஆகியவை இணைந்து விடுத்துள்ள கூட்டறிக்கையில் இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் டித்வா புயலினால் ஏற்பட்ட பாரிய அனர்த்தம் நிகழ்ந்து 93 நாட்கள் கடந்துள்ள நிலையில், அக்காலப் பகுதி முழுவதும் அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர்களும் கிராம உத்தியோகத்தர்களும் இரவு பகல் பாராது தொடர்ச்சியாக சேவையாற்றி, அரசாங்கத்திற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இடையிலான பிரதான இணைப்பாளர்களாகச் செயற்பட்டுள்ளதாக அத்தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

மேலும், அனர்த்தப் பணிகளுடன் தொடர்புடைய நட்டஈடு மற்றும் மீளளிப்புக் கொடுப்பனவுகளுக்கான மதிப்பீடுகளைத் தயாரிப்பதில் தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் கள மட்டத்தில் விசேட பங்களிப்பை வழங்கி வருவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தாங்கள் ஆற்றியுள்ள இந்த அர்ப்பணிப்பான சேவைக்கு ஒப்பான தற்போதைய பிரச்சினைகள் குறித்து அரசாங்கம் போதிய கவனம் செலுத்தாமை காரணமாகவே இவ்வாறான தொரு கூட்டுத் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடத் தீர்மானித்ததாக அத்தொழிற்சங்கங்கள் மேலும் வலியுறுத்துகின்றன. (ம-7)

## வவுனியாவில்...

செட்டிகுளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வீரமாணிக்கங்குளம் மற்றும் முசல்குத்திக்குளம் பகுதிகளில் பூர்வீகமாக வாழ்ந்து வந்த 300க்கும் மேற்பட்ட குடும்பங்களின் காணிகள் இவ்வாறு கையகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம், அதன் தலைவர் உபாலி சமரசிங்க தலைமையில் நேற்று வியாழக்கிழமை (26) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், கடந்த அமர்வுகளில் முன்வைக்கப்பட்ட வனவளத் திணைக்களத்தின் கீழ் உள்ள குளங்கள் மற்றும் காணிகளை விடுவிப்பது தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம், செட்டிகுளம் பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட வீரமாணிக்கங்குளம் மற்றும் முசல்குத்திக்குளம் கிராமங்களில் 1977ஆம் ஆண்டு மக்கள் குடியமர்த்தப்பட்டதாகவும், பின்னர் பல்வேறு காரணங்களால் இடம்பெயர்ந்த மக்கள் தற்போது மீண்டும் திரும்பி வந்து மீள்குடியேற முயன்றபோது வனவளத் திணைக்களம் இடையூறு விளைவிப்பதாகவும் தெரிவித்தார். இதற்கு உடனடி தீர்வு எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த செட்டிகுளம் பிரதேச செயலாளர், குறித்த கிராமங்களில் வாழ்ந்தவர்கள் என 293 குடும்பங்கள் மீள் குடியேற்றத்திற்கான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளதாகவும், அவர்களில் பலர் காணி உரிமை தொடர்பான ஆவணங்களையும் கொண்டுள்ளதாகவும் தெரிவித்தார். மொத்தமாக 672 ஏக்கர் காணிகளை விடுவிக்க கோரிக்கை விடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்தக் காணிகளில் இடிந்த நிலையில் உள்ள கிணறுகள், பழைய பாடசாலைகள் இருந்தமைக்கான சான்றுகள், இடிபாடடைந்த கட்டடங்கள் காணப்படுவதாகவும், இக்காணிகளை விடுவிக்க முடியும் என வனவளத்திணைக்களம் முன்பே தெரிவித்திருந்த நிலையில், 2024 ஆம் ஆண்டு அவை வர்த்தமானி அறிவிப்பு மூலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த வனவளத் திணைக்கள அதிகாரி, பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தரும் குடியேற்ற உத்தியோகத்தரும் இணைந்தே இந்த வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்டதாகவும் தெரிவித்தார்.

எனினும், அவ்வாறு எந்தவித ஒத்துழைப்பும் வழங்கப்படவில்லை என்றும், தங்களுக்கு இது தொடர்பாக முன் அறிவிப்பே கிடைக்கவில்லை என்றும் செட்டிகுளம் பிரதேச செயலாளர் மறுத்தார்.

இதனையடுத்து, குறித்த காணி தொடர்பில் செட்டிகுளம் பிரதேச செயலாளர் மற்றும் வனவளத்திணைக்கள அதிகாரிகள் இணைந்து பிறிதொரு நாளில் கலந்துரையாடி தீர்மானம் எடுக்க வேண்டும் என ஒருங்கிணைப்புக் குழு முடிவு செய்தது.

இதன்போது கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வனவளத் திணைக்களம் தொடர்பாக கூட்டங்களில் பேசப்படும் விடயங்கள் நடைமுறையில் அமுல்படுத்தப்படுவதில்லை எனச் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, கடந்த கூட்டங்களில் விடுக்கப்பட்ட கோரிக்கைகளுக்கமைய, வனவளத்திணைக்களத்தின் கீழ் இருந்த 17 குளங்கள் விடுவிக்கப்பட்டுள்ளதாகவும், மேலும் 24 குளங்கள் தொடர்பில் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், 5 குளங்களை விடுவிக்க முடியாது என திணைக்களம் அறிவித்துள்ளதாகவும் கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரி இரண்டாம் வருட மாணவ ஆசிரியர்களின் துண்டக் கற்பித்தல் சாதனங்களின் கண்காட்சியை கல்லூரியின் பீடாதிபதி ரி.கணேசரத்தினம் ஆரம்பித்து வைத்தார். இக் கண்காட்சியை மாணவ ஆசிரியர்களும் விரிவுரையாளர்களும் பார்வையிட்டனர்.

### உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளை

# தடுக்க முயற்சிக்க வேண்டாம்

## வெளியான அறிவிப்பு

**(கொழும்பு)**

**உயிர்த்த ஞாயிற்றுக்கிழமை நடந்த பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளைத் தடுக்க முயற்சிக்க வேண்டாம் என்று கொழும்பு மறை மாவட்டத்திற்கான ஊடக பேச்சாளர் அருட்தந்தை சிறில் காமினி அறிவித்துள்ளார்.**

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பாக இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார். அதன்போது, மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

"இது 300 உயிர்களைக் கொன்ற ஒரு கொடூரமான தாக்குதல். அவர்களில் பெரும்பாலானோர் ஈஸ்டர் ஞாயிறு திருப்பலியில் கலந்து கொள்ளச் சென்றவர்கள். இறந்தவர்களில் அனைத்து மதங்கள் மற்றும் இனங்களைச் சேர்ந்த மக்களும் உள்ளனர். இது ஒரு படுகொலை.

இதன் பின்னணியில் உள்ள உண்மையைக் கண்டறிவது, இந்த நாட்டில் சட்டம் முறையாக செயற்படுத்தப்படுகிறது என்பதை எவரும் புரிந்து கொள்ள முடியும். இல்லையெனில், சிலர் சட்டத்திற்கு பயப்படுவதில்லை. அவர்கள் ஒரு குற்றத்தைச் செய்து மறைக்க முடியும்.

எனவே, அவர்கள் குற்றங்களைச் செய்ய பயப்படுவதில்லை என்பதை இது நிரூபிக்கிறது. இதை நாங்கள் ஏற்றுக்கொள்ள முடியாது.

இது தொடர்பாக அறிக்கைகளை வெளியிடுபவர்களையும் கைதுகள் தொடர்பாக வெவ்வேறு விமர்சனங்களை முன்வைப்பவர்களையும் பார்க்கும்போது, அவர்களின் பின்னணியில் உள்ள நிகழ்ச்சி நிரல் என்ன என்பதை நீங்கள் புரிந்து கொள்ளலாம். எனவே, இதை அரசியலாக்க வேண்டிய அவசியமில்லை.

இது சிஐடியின் சுயாதீன விசாரணை. அந்த விசாரணைகளை சுயாதீனமாக நடத்த அனுமதிப்பது நல்லது.

இல்லையெனில், இந்த விசாரணைகளை நாசப்படுத்தும் முயற்சியை இந்த தாக்குதலில் கொல்லப்பட்ட மற்றும் ஊனமுற்ற பாதிக்கப்பட்டவர்களுக்கு அநீதியாக நாங்கள் பார்க்கிறோம்.

"எனவே, இந்த விசாரணைகளில் தலையிட வேண்டாம் என்று அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம். இந்த விசாரணைகள் தொடர வேண்டும். இந்த விசாரணைகளிலிருந்து சில முடிவுகள் வரும் என்று நாங்கள் நம்புகிறோம்.

அதில் பலரும் பேசும் அரசியல் சதி இருந்ததா? அப்படியானால், யார் அதைச் செய்தார்கள்? இந்தத் தாக்குதல் ஏன் நடத்தப்பட்டது என்பதை நாம் நிச்சயமாகக் கண்டுபிடிக்க வேண்டும்.

யாராவது அதில் தலையிட்டால், பாதிக்கப்பட்டவர்களுக்கு எதிரான ஒரு பெரிய குற்றமாக நாங்கள் அதைப் பார்க்கிறோம். எனவே தயவு செய்து இந்த விசாரணைகள் தொடர அனுமதித்து பொறுமையாகக் காத்திருங்கள் என அவர் தெரிவித்தார். ஞ்ரி


## கண்ணீர் அஞ்சலி





# அமரர் கெலன் ஜெயசீலி திருஞானம்

(எமது நண்பன் நிக்சன் அவர்களின் அன்புத் தாயார்)

அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

(C-5062)

Yarl Aid

நட்பு மணி NATPUMANN தோழமையின் உறைவிடம்




யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையால் நடத்தப்பட்ட புண்ணிய நாச்சியம்மையார் குருபூசைதினமும் பரிசளிப்பு விழாவும் கடந்த 19 ஆம் திகதி வியாழக்கிழமை யாழ்ப்பாணம் நீராவியடி, நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றது.


இன்றைய விலை
ரு.150*





இன்னும்
30
வருடங்களில்?

*2026 ஜனவரி மாத பொதுவான சந்தை விலை

எதிர்காலத்தை பயமில்லாமல் எதிர் கொள்ளுங்கள்

CEYLINCO LIFE உடன் ஓய்வுக்காலத்தை திட்டமிடுங்கள்

இன்றே அழையுங்கள் 0112 461 461


CEYLINCO LIFE

வாழ்க்கைக்கான நிரந்தர உறவு

(C-428)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்




(சாவக்சேரி)

சாவகச்சேரி - புலோலி வீதிப் புனரமைப்புக்கான ஆரம்ப நிகழ்வு தென்மராட்சி சரசாலையில் கடந்த 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்நிலையில் சாவகச்சேரி - புலோலி பிரதான வீதியின் 3.9 கிலோமீற்றர் பகுதி போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் 232 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் காப்பெற் வீதியாக புனரமைக்கப்படவுள்ளது.

நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், தேசிய மக்கள் சக்தியின் தென்மராட்சி இணைப்பாளர் கா. பிரகாஷ், பிரதேச சபை உறுப்பினர்கள், வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-30)

## பயங்கரவாதத் தடைச்சட்டங்களுக்கு எதிராக தென்மராட்சியில் கையெழுத்துப் போராட்டம்




(சாவகச்சேரி)

வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் இயக்கத்தின் ஏற்பாட்டில் பயங்கரவாத தடைச்சட்டங்களுக்கு எதிரான கையெழுத்துப் போராட்டம் சாவகச்சேரிப் பகுதியில் நேற்று வியாழக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க கோரியும், கொண்டு வரப்படவுள்ள பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாக்கும் சட்டத்தை நிறுத்தக் கோரியும், இந்த கையெழுத்துப் பெறும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அதற்கமைய தென்மராட்சிப் பிரதேசத்தின் கொடிகாமம் மற்றும் சாவகச்சேரி பகுதிகளில் கையெழுத்துக்கள் பெறப்பட்டன. கையெழுத்துப் பெறும் போராட்டத்தில் சாவகச்சேரி நகரசபை உப தவிசாளர் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது பொதுமக்கள், வர்த்தகர்கள் பயங்கரவாத தடைச் சட்டங்களுக்கு எதிராக தமது கையெழுத்துக்களைப் பதிவு செய்திருந்தனர். (8-30)

## பயங்கரவாதத் தடைச்சட்டம் வேண்டாம் பருத்தித்துறை நகரசபையில் தீர்மானம்

(கரணவாய்)

பயங்கரவாத தடைச்சட்டம் எந்த வடிவத்திலும் வேண்டவே வேண்டாம் என வலியுறுத்தி பருத்தித்துறை நகரசபையிலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறை நகரசபை மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் புதன்கிழமை நகரசபைத் தலைவர் வின்சென் டி போல் டக்ளஸ் போல் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பயங்கரவாத தடைச்சட்டம் எந்த வடிவத்திலும் வேண்டவே வேண்டாம் என்பதை வலியுறுத்தும் தீர்மானம் தலைவரால் முன்வைக்கப்பட்டது. இதற்கு தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்கள் கடுமையான எதிர்ப்பினை தெரிவித்திருந்தனர். பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும் சட்டம் தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இல்லை என குறிப்பிட்டு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

இருப்பினும் ஏனைய 13 உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்த நிலையில் குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (8-60)

## சாட்டி கடற்கரை அபிவிருத்திக்கு 30 மில்லியன் ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

வடக்கில் சிறந்த நீச்சலுக்கான கடற்கரையாக பரிசீலிக்கப்படும் வேலணை சாட்டி கடற்கரை இப்பொழுது நாட்டின் பல பகுதிகளிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் மத்தியில் பிரபலமாகி வருகிறது.

அந்த அடையாளமான கடற்கரையை, சுற்றுலா பிரதேசமாக மாற்ற, வசதிகள் மேம்படுத்தல் மற்றும் அபிவிருத்திப் பணிகள் அவசியம் என மதிப்பீடு செய்யப்படுகிறது.

இந்த முன்னேற்றத்தின் ஒரு பகுதியாக, சுற்றுலா துறையை மேம்படுத்த சாட்டி கடற்கரைக்காக 30 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், இதனால் சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அனைத்து வசதிகளும் விரைவில் ஏற்படுத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (8-33)

## நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலை குறைபாடுகள் குறித்து ஆராய்வு



(வவுனியா)

வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள நெடுங்கேணி பிரதேச வைத்தியசாலைக்கு நேற்றைய தினம் நேரடியாகச் சென்ற வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், வைத்தியசாலையிலுள்ள குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்துகொண்டார்.

அந்தவகையில் நெடுங்கேணி வைத்தியசாலையின் வைத்தியர், நலன்புரிச்சங்கத்தினர் மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் ஆகியோருடன் கலந்துரையாடலில் ஈடுபட்டு வைத்தியசாலையில் உள்ள குறைபாடுகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

அத்தோடு வைத்தியசாலையில் காணப்படும் மிகவும் முக்கியமான பௌதீகவளக் குறைபாடொன்றைச் சீர் செய்வது தொடர்பான மதிப்பீட்டு அறிக்கை ஒன்றினை தம்மிடம் கையளிக்குமாறு வைத்தியரிடம் கேட்டுக்கொண்டார்.

அத்துடன் இம்முறை தமக்கு குறித்தொதுக்கப்பட்ட நிதியிலிருந்து வைத்தியசாலைக் குறைபாடொன்றை தீர்த்துவைப்பது தொடர்பில் தம்மால் கவனம் செலுத்தப்படுமெனவும் தெரிவித்தார். (8)

## தணிகைவேள் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான அரையிறுதி ஆட்டங்கள் இன்று

(யாழ்ப்பாணம்)

அமரர் தணிகைவேள் ஞாபகார்த்த கிண்ணத்திற்கான வடமராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையிலான 16 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான கால்பந்தாட்ட போட்டியின் அரையிறுதி ஆட்டங்கள் இன்று காலை 8 மணிக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த அரையிறுதி ஆட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியும், அடுத்த அரையிறுதி ஆட்டத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி அணியை எதிர்த்து கொற்றாவத்தை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை அணியும் மோதவுள்ளன. (நி-90)



வடக்கு மாகாண கிராமிய அபிவிருத்தி திணைக்களத்தின் அனுசரணையோடு தென்மராட்சிப் பிரதேச செயலக மகளிர் அபிவிருத்தி நிலையம் நடாத்திய கண்காட்சி, தென்மராட்சி பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கடந்த 25 ஆம் திகதி புதன்கிழமை இடம்பெற்றது.

ஆடை வடிவமைத்தல், அழகுக்கலை மற்றும் மனைப் பொருளியல் கண்காட்சியாக மேற்படி கண்காட்சி இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (படம்:- சுபேசன்)

## கைதடி வடக்கு நீர்வேலி இணைப்பு வீதியை புனரமைக்க நடவடிக்கை எடுங்கள்

(சாவகச்சேரி)

கைதடி வடக்கு நீர்வேலி இணைப்பு வீதியை காப்பெற் வீதியாக புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாவகச்சேரிப் பிரதேசசபை உறுப்பினர் க.சிவபாதம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கைதடி வடக்கு தச்சன்பிட்டி இந்துமயானம் அருகே ஆரம்பித்து நீர்வேலியின் பழைய கண்ணாடித் தொழிற்சாலை அருகாக பருத்தித்துறை வீதியுடன் இணைக்கும் மேற்படி இணைப்பு வீதியானது நீண்டகாலமாக புனரமைப்பு வேலைகள் நடைபெறாமல் பாலம் மட்டும் அமைக்கப்பட்ட நிலையில் இருப்பதனால் இவ்வீதியினை பயன்படுத்துவதில் மக்கள் பல சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த வீதியை முழுமையாக புனரமைக்கப்படும் போது கைதடியிலிருந்து நீர்வேலி வாழைக்குலைச் சங்கத்துக்கு விவசாயிகள் தமது வாழைக்குலைகளை கொண்டு செல்வதற்கு இலகுவாக அமையும் என்பதுடன், வலி. கிழக்கில் உற்பத்தி செய்யப்படும் விவசாய உற்பத்தி பொருட்களை மட்டுவிலில் அமைந்துள்ள பொருளாதார மத்திய நிலையத்திற்கும் இந்தப் பாதை ஊடாக இலகுவாக கொண்டு செல்லமுடியும்.

எனவே இவ் வீதியை புனரமைக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளார். (8-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத சொத்துக் குவிப்பு 4 மாதங்களில் ஒரு லட்சம் பேர் கைது

(கொழும்பு)

இலங்கையில் போதைப்பொருள் ஒழிப்புக்காக முன்னெடுக்கப்பட்டு வரும் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளின் கீழ், கடந்த நான்கு மாதங்களில் மாத்திரம் ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 900 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எவ்.யு.வூட்லர் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த நான்கு மாதங்களாக போதைப்பொருள் ஒழிப்புச் செயற்றிட்டம் மிகவும் ஆக்கபூர்வமான முறையில் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டார்.

இக்காலப்பகுதியில் 15 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் தீவிர பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், அவர்களில் ஒரு இலட்சத்து 2 ஆயிரத்து 900 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 2 ஆயிரத்து 400 பேருக்கு எதிராக நீதிமன்றங்கள் ஊடாகத் தடுப்புக் காவல் உத்தரவு பெறப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அத்துடன், போதைப்பொருள் கடத்தல் மூலம் ஈட்டிய சட்டவிரோத சொத்துக் குவிப்புத் தொடர்பில் 146 விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார். (நி)

# இலங்கைக்கு கடத்தவிருந்த 620 கிலோ முந்திரி பறிமுதல்

(கொழும்பு)

இந்தியாவின் ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மண்டபத்தை அடுத்துள்ள மரைக்காயர்பட்டிணம் கடற்கரையில் இருந்து இலங்கைக்கு கடத்துவதற்காக படகில் ஏற்றிக்கொண்டிருந்த 620 கிலோ உயர் ரக முந்திரிப் பருப்பு மூடைகளும் நேற்று குறித்த கடற்கரைப் பகுதியில் வைத்து அப்பிராந்திய பொலிஸாரால் பறிமுதல் செய்யப் பட்டுள்ளன.

அத்துடன், கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்ட படகு, இரு சக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்களுடன் மரைக்காயர் பட்டினத்தை சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸார் பறிமுதல் செய்த முந்திரிப் பருப்பு மூடைகளின் பெறுமதி இந்திய மதிப்பில் 15 லட்சம் ரூபாய் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ராமநாதபுரம் மாவட்ட கடற்கரை இலங்கைக்கு மிக அருகில் இருப்பதால் தனுஷ்கோடி கடல் வழியாக மண்டபம், வேதாளை, மரைக்காயர் பட்டினம், குந்துகால், களிமண்குண்டு உள்ளிட்ட பகுதிகளில் இருந்து இலங்கைக்கு கடல் வழியாக நாட்டுப்படகில் கஞ்சா பீடி இலை பண்டல்கள், முந்திரி பருப்பு, கடல் அட்டை, சமையல் மஞ்சள் உள்ளிட்ட பொருட்கள் கடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)


## காவலாளி தேவை

நல்லூரில் அமைந்துள்ள அகில இலங்கை இந்து மாமன்ற அலுவலகத்தில் பணியாற்றுவதற்கு தகுதியானவர் விண்ணப்பிக்கவும்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி :**
**அகில இலங்கை இந்து மாமன்றம்.**
**211/17, கோவில் வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

(6923)


# நுவரெலியாவில் அதிரடி சோதனை 73 வாகனங்களுக்கு தடை

(நுவரெலியா)

நுவரெலியாவில் முன்னெடுக்கப்பட்ட திடீர் வாகன சோதனையின் போது, 73 வாகனங்களுக்கு போக்குவரத்தில் ஈடுபடத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

14 நாட்களுக்கு இந்த தடை அமுல்படுத்தப்படும் என, மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் அதிகாரி ஜாலிய பண்டார குறிப்பிட்டுள்ளார்.

25 தனியார் பேருந்துகள் அடங்கலாக 73 வாகனங்களுக்கு இவ்வாறு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

உரிய வாயு பரிசோதனை மேற்கொள்ளாது, போக்குவரத்துக்கான தரத்தைக் கொண்டிராத வாகனங்களுக்கே, தடை விதிக்கப்பட்டுள்ளது.

தரமான போக்குவரத்து சேவையை உறுதி செய்யும் நோக்கில், நுவரெலியா மாவட்டத்தில் இந்த திடீர் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டதாகவும் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் அதிகாரி ஜாலிய பண்டார சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

## திருத்தம்

வலிகாமம் கிழக்கு பிரதேச சபையினால் 26.02.2026ஆம் திகதிய வலம்புரி பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட **INVITATION FOR BID 2026/02** என்னும் கேள்வி அறிவித்தலில் உள்ள அட்டவணையில் பின்வரும் திருத்தம் செய்யப் படுகின்றது.

| Bid No | Required Bid Security/ Bank Draft/ Security Deposit | |
|---|---|---|
| | Security Amount (Rs.) | Validity Period |
| MA/NP/JAF/ VEPS/ 2026/01 | 43,000.00 | 01.06.2026 |

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Valikamam East Pradeshiya Sabha, Puttur.**

(C-5058)


யாழ் மாவட்ட இசைக்குழுக்கலைஞர் சங்கம் நடாத்தும்
மாபெரும் இசைத்திருவிழா
Carnival Music Festival
வலம்புரி
Time 2 PM to 1 AM
முதற் தடவையாக
யாழ் முன்னணி இசைக்குழுக்கள் ஒரே மேடையில்
சங்கமிக்கும் பிரம்மாண்ட தொடரிசை நிகழ்ச்சிகள்
MARCH 06: அருணா, சண், S.G.சாந்தன், நியூ ஆனந்
MARCH 07: யாழ் ராகம்ஸ், சிம்பொனி, சுருதிலயா, சண்சுருதி
MARCH 08: ப்ரண்ட்ஸ், யாழ் ரியூன்ஸ், எஸ். என் மியூசிக், சாரங்கா
ஒலி அமைப்பு: SMS, MESIYA SOUND, MOHAN Sounds
பிரவேசம் பெரியோர்:200/= சிறுவர்:100/=
DIAMOND SPONSOR: FineMart Stylish
மேலதிக தகவல்களுக்கு 077 227 1142, 077 205 1992, 077 280 4865
DIAMOND SPONSOR: விஜிதா VIJITHA
SABARI, முத்துமாரி, வசந்தம் சுப்பமாக்கற், VASANTHAM FOOD (PVT) LTD



## சேவை நலன் பாராட்டு




திரு.**பொன்னன் செல்வராசா** அவர்கள்

(பொது முகாமையாளர் யாழ் மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து))

கூட்டுறவுத்துறையில் 35 வருடங்களுக்கு மேலாக சிறப்பாக பணியாற்றி 27.02.2026 இன்றுடன் ஓய்வு பெற்றுச் செல்லும் யாழ்.மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பொது முகாமையாளர் திரு. பொ.செல்வராசா அவர்களை பாராட்டி வாழ்த்துவதில் பெருமிதம் அடைகின்றோம். எமது ஜனசக்தி சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தின் உருவாக்கத்திற்கும். அதன் வளர்ச்சிக்கும் இவரின் பங்கு அளப்பரியது. இவரின் ஓய்வுக்காலம் சீரும் சிறப்புடன் மகிழ்வாய் அமைந்திட எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம். (6919)

வாழ்த்துவோர்–
நெறியாளர்சபை உறுப்பினர்களும் அங்கத்தவர்களும்
ஜனசக்தி சிக்கனகடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் [வ–து]
சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இஸ்ரேல் பாராளுமன்றத்தின் உயரிய விருது பெற்றார் மோடி




(இஸ்ரேல்)

பிரதமர் நரேந்திர மோடி அரசுமுறை பயணமாக இஸ்ரேல் நாட்டுக்குச் சென்றுள்ளார். சிறப்பு விமானம் மூலம் இஸ்ரேல் சென்ற அவருக்கு அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேரில்சென்று உற்சாக வரவேற்பு அளித்தார்.

இதையடுத்து, பிரதமர் மோடி இஸ்ரேல் பாராளுமன்றத்திற்கு சிறப்பு விருந்தினராகச் சென்று உரையாற்றினார். இதனால் அங்கு இந்திய தேசிய கொடியின் மூவர்ணங்களில் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இஸ்ரேல் பாராளுமன்றத்தில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களுக்கு அந்நாட்டு சபாநாயகர் உயரிய விருதை அளித்து கௌரவித்தார்.

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீன நாடுகளின் உயரிய விருதுகளைப் பெற்ற ஒரே உலக தலைவர் பிரதமர் மோடி என்பது குறிப்பிடத்தக்கது. (நி)



# பயங்கரவாதத்தால் ஏற்...

# இந்தியாவும் உணர்ந்துள்...

## இஸ்ரேல் பாராளுமன்றில் இந்தியப் பிரதமர் மோடி...

(இஸ்ரேல்)

**பயங்கரவாதத்துக்கு எதிரான உறுதிப் பாட்டில் இஸ்ரேலுடன் இந்தியா இன்றும் என்றும் துணை நிற்கும். பயங்கரவாதத்தை எந்தவொரு காரணமும் நியாயப்படுத்த முடியாது என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.**

பிரதமர் நரேந்திர மோடி அரசுமுறை பயணமாக நேற்று இஸ்ரேல் நாட்டுக்குச் சென்றார். சிறப்பு விமானம் மூலம் இஸ்ரேல் சென்ற அவருக்கு அந்நாட்டு பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு நேரில் சென்று உற்சாக வரவேற்பு அளித்தார்.

இதையடுத்து, பிரதமர் மோடி இஸ்ரேல் பாராளுமன்றத்திற்கு சிறப்பு விருந்தினராகச் சென்று உரையாற்றினார். அதன்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் படைகளின் கொடூரத் தாக்குதலில் கொல்லப்பட்ட அனைவரின் குடும்பத்திற்கும் இந்திய மக்களின் இரங்கல் செய்தியை கொண்டு வந்துள்ளேன். நாங்கள் உங்கள் வலியை உணர்கிறோம்.

இந்தியாவும் பயங்கரவாதத்தால் ஏற்படும் வலியை நீண்ட காலமாக உணர்ந்துள்ளது. இஸ்ரேலியர்கள் உட்பட ஏராளமான அப்பாவி மக்

# எங்கும் ஊழல்! எதிலும் ஊழல்!

## 5 வருடங்களாகப் பணியாற்றிய போலி நீதிபதி

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில், போலி சான்றிதழ் சமர்ப்பித்து உயர்நீதிமன்ற நீதிபதியாக ஒருவர் 5 ஆண்டுகளாக பணியாற்றி வந்த அதிர்ச்சி சம்பவம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது.

பாகிஸ்தானின் தலைநகர் இஸ்லாமாபாத் உயர் நீதிமன்றத்தில் நீதிபதியாக இருந்தவர், தாரிக் மெஹ்மூத் ஜஹாங் கிரி.




இவர், 2020இல் உயர் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார்.

கராச்சி பல்கலைக் கழகத்தில் 1988இல் வழக்கறிஞருக்கு படித்ததாகக் கூறிய ஜஹாங்கிரி, மோசடி வழிகளில் பட்டத்தைப் பெற்றது நீதிமன்ற ஆய்வில் தெரிய வந்தது.

தேர்வின்போது மோசடி செய்ததாக பிடிப்பட்ட அவருக்கு 1989இல் பல்கலைக்கழகம், 3 ஆண்டுகள் தேர்வு எழுத தடைவிதித்தது.

ஆனால் இந்ததடையை மீறி, வேண்டுமென்றே மோசடி செய்து, வேறொரு மாணவரின் சேர்க்கை எண்ணை வைத்து, ஜஹாங்கிரி, 1990ஆம் ஆண்டு தேர்வை எழுதியுள்ளார்.

பல்கலைக்கழகத்தின் அசல் ஆவணங்கள், பதிவாளர் சமர்ப்பித்த ஆதாரங்கள் ஆகியவற்றை ஆய்வு செய்த நீதிமன்றம், அவரது கல்வி சான்றிதழ்கள் மோசடி என கண்டுபிடித்தது.

இதைத் தொடர்ந்து, இஸ்லாமாபாத் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி சர்தார் முகமது சர்ப்ராஸ் தலைமையிலான அமர்வு, மெஹ்மூத் ஜஹாங்கிரியின் நியமனம் செல்லாது என்று 116 பக்க தீர்ப்பு வழங்கி, அவரை பதவியில் இருந்து நீக்கம் செய்து அதிரடி உத்தரவிட்டுள்ளது.


மேலும், ஜஹாங்கிரியின் பட்டம் ஆரம்பம் முதலே செல்லாது என்றும் அறிவித்தது.

இதனால் 5 ஆண்டுகள் அவர் நீதிமன்றத்தில் அமர்ந்து பல வழக்குகளில் வழங்கிய தீர்ப்புகள் அனைத்தும் சட்டரீதியாக செல்லாது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இது பாகிஸ்தான் நீதித்துறை வரலாற்றில் மிக அரிதான, மிகுந்த அதிர்ச்சி தரும் சம்பவமாக கருதப்படுகிறது. (நி)

# காலநிலை ம...

## அழியும் நிலையில்...



(அந்தாட்டிக்கா)

காலநிலை மாற்றத்தினால் அந்தாட்டிக்காவில் பனிக்கட்டிகள் உருகுவதால், அங்குள்ள எம்பரர் பென்குயின்கள் பேரழிவைச் சந்தித்து வருவதாக விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.


இதேவேளை அங்குள்ள பென்குயின்கள் ஆண்டுதோறும் பழைய இறகுகளை உதிர்த்து புதிய இறகுகளை வளர்க்கும் திறன் கொண்டவையாக காணப்படுகின்றன.

புதிய இறகுகள் வளர்வதனால் பென்குயின்களால் 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

ற்படும் வலியை
ள்ளது



டி

கள் கொல்லப்பட்ட மும்பை பயங்கரவாதத் தாக்குதலை நாங்கள் நினைவு கூர்கிறோம்.

உங்களைப் போலவே எங்களுக்கும் பயங்கரவாதத்திற்கு எதிரான இரட்டை நிலைப்பாடு இல்லாத பூச்சிய சகிப்புத் தன்மை கொண்ட கொள்கையுள்ளது.

காசா அமைதித்திட்டத்திற்கு இந்தியா ஆதரவளிக்கிறது. இந்தியாவின் வளர்ச்சியில் யூதர்களின் பங்கு மிகவும் முக்கியமானது எனத் தெரிவித்தார்.

பிரதமர் மோடி இஸ்ரேல் செல்வது இது இரண்டாவது முறை என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

## தாய்ப் பாசத்திற்காக ஏங்கிய குட்டி குரங்கு தத்தெடுக்கத் துடிக்கும் கோடீஸ்வர சகோதர்கள்



(டோக்கியோ)

தாயால் கைவிடப்பட்டு, ஒரு பொம்மையைத் தாயாகக் கருதி அணைத்துக் கொண்டிருக்கும் "பஞ்ச்" எனும் ஜப்பானிய குட்டி குரங்கின் கதை இணையத்தில் வைரலாகி வரும் நிலையில், அதனை விலைக்கு வாங்க பிரபல கோடீஸ்வரர்களான டேட் சகோதரர்கள் முன்வந்துள்ளனர்.

2025 ஜூலையில் பிறந்த இந்த குட்டி குரங்கு, தாயால் நிராகரிக்கப்பட்டதால் ஒரு மென்மையான பொம்மையைத் தாயாகப் பாவித்து அதனுடன் ஒட்டிக்கொண்டது.

இந்த உருக்கமான வீடியோவைப் பார்த்த ட்ரிஸ்டன் டேட், அந்தக் குரங்கை வாங்குவதற்கு 250,000 டொலர்களை வழங்கத் தயார் என அறிவித்துள்ளார்.

"நான் விளையாட்டாகச் சொல்லவில்லை" என அவர் 'எக்ஸ்' தளத்தில் பதிவிட்டுள்ள நிலையில், வனவிலங்குகளைத் தனிநபர்கள் வாங்குவது குறித்து இணையத்தில் பெரும் விவாதம் எழுந்துள்ளது.

தற்போது 7 மாதங்களேயான 'பஞ்ச்', மற்ற குரங்குகளுடன் பழகும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளதாக பூங்கா ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். (நி)



## தாய்வான் அருகே ஏவுகணைகள் நிலைநிறுத்துகிறது ஜப்பான்

### சீனாவுடன் மோதல் வலுக்கும் அபாயம்

(டோக்கியோ)

சீனாவுடனான பிராந்திய பதற்றங்கள் அதிகரித்து வரும் சூழலில், தாய்வானுக்கு மிக அருகிலுள்ள யோனகுனி தீவில் 2031ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் தரைப் படையிலிருந்து ஏவப்படும் ஏவுகணைகளை நிலைநிறுத்த ஜப்பான் திட்டமிட்டுள்ளது.

தாய்வான் கடற்கரையிலிருந்து வெறும் 110 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்தத் தீவில் ஏவுகணைகளை நிலைநிறுத்துவதற்கான காலக்கெடுவை ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் ஷின்ஜிரோ கொய்சுமி உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.


ஜப்பானில் தயாரிக்கப்பட்ட இந்த நடுத்தர தூர ஏவுகணைத் தொகுதியானது, ஒரே நேரத்தில் 100 இலக்குகளைக் கண்காணித்து 12 இலக்குகளைத் தாக்கும் வல்லமை கொண்டதுடன், சுமார் 50 கி.மீ சுற்றளவுக்குப் பாது [illegible] யது.

அண்மைய தேர்தலில் பிரதமர் சனே தகாய்ச்சி பெற்ற பாரிய வெற்றியைத் தொடர்ந்து, ஜப்பானின் பாதுகாப்புத் திறனை வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் அவர் தீவிரம் காட்டி வருகிறார்.

தாய்வான் மீது தாக்குதல் நடத்தப்பட்டால் ஜப்பான் தனது தற்காப்புப் படையைச் செயற்படுத்தும் என்ற பிரதமரின் நிலைப்பாடு சீனாவுடனான உறவில் பெரும் விரிசலை ஏற்படுத்தியுள்ளது.

இதற்குப் பதிலடியாக ஜப்பானிய நிறுவனங்கள் மீது சீனா ஏற்றுமதி கட்டுப்பாடுகளை விதித்துள்ளதுடன், ஜப்பானின் இந்த நகர்வை இராணுவ மோதல்களைத் தூண்டும் செயல் என விமர்சித்துள்ளது.

யோனகுனி தீவை ஒரு முக்கிய இராணுவ முகாமாக மாற்றி வரும் ஜப்பான், 2026 ஆம் நிதியாண்டில் அங்கு எதிரியின் தகவல் தொடர்புகளைச் சீர்குலைக்கும் மின்னணு போர்முறைப் பிரிவையும் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. (நி)



## மாற்றத்தால்
## ல் பெண்குயின்கள்



நாட்கள் நீரில் நீந்த முடியாது. பனிக்கட்டிகள் மீதே தங்கியிருக்க வேண்டும். இதனால் குறித்த பெண்குயின்கள் பேரழிவைச் சந்திப்பதற்கான நிலைமை உருவாகியுள்ளது.

இதேவேளை 2022-2024 காலப்பகுதியில் கடல் பனிக்கட்டிகள் வரலாறு காணாத அளவில் உருகியதால், பென்குயின்கள் தங்குவதற்கு இடமில்லாமல் போனதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

செயற்கைக்கோள் தரவுகளை ஆய்வு செய்த விஞ்ஞானியான பீட்டர் ஃப்ரெட்வெல், ஆயிரக்கணக்கான பென்குயின்கள் உறைபனி நீரில் விழுந்து உயிரிழந்திருக்கலாம் என அஞ்சுவதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை மேற்கு அந்தாட்டிக்காவில் வாழும் உலகின் 40 வீதமான பென்குயின்கள் தற்போது மிக மோசமான நிலையில் உள்ளதாக பி.பி.சி செய்தி வெளியிட்டுள்ளது. (நி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயல்வன்மை



முனைவர்
ச.மனோன்மணி

செயல் என்பது ஒரு செயற்பாட்டைக் குறிப்பது. இதைவிட வினை, தொழில் என்னும் இரு சொற்களும் செயற்பாட்டைக் குறிக்கும் சொற்களாக வழக்கிலே உள்ளன. "வினை" என்ற சொல்லின் பயன்பாடு தற்போது ஓர் இலக்கணக் குறியீடாக உள்ளது.

"தொழில்" என்னும் சொல் செயற்பாட்டைக் குறிப்பதற்கு இன்றும் பயன்படுகிறது. ஒருவருடைய பணிப்புரைக்கு ஏற்ற செயற்பாட்டை நிறைவு செய்வது தொழில் எனக் கூறலாம்.

"செயல்வன்மை" என்பது செயற்பாட்டுத் திறனைக் குறித்து நிற்கிறது. திருக்குறள் என்னும் பண்டைத் தமிழிலக்கியம் இதனை விளக்கிப் பத்துக்குறட்பாக்களைத் தொகுத்துள்ளது.

ஆனால் அவை செயல்வன்மைக்கு உறுதுணையாக இருக்க வேண்டிய ஏனைய திறன்களையும் தெளிவாக எடுத்துரைத்துள்ளன. செயல்வன்மைக்கு அடிப்படையாக இருக்க வேண்டிய ஒன்று உண்டு. அதுவே நாம் செய்யப் போகும் செயலை நன்கு ஆராய்ந்து செய்யும் குணவியல்பாகும்.

இந்த ஆய்வை ஒரு படிமுன்றயாகச் செய்ய வேண்டுமென வள்ளுவர் முதலிலேயே அறிவுறுத்துகிறார். ஒரு செயலைச் செய்வதற்கு முன்பு அதனால் ஏற்படும் நன்மையையும் தீமையையும் நன்கு ஒப்பிட்டு நோக்கிய பின்பே அதனைச் செய்யத் தொடங்க வேண்டும்.



**வெள்ளி நற்சிந்தனை 27**

இன்னும் செய்யவிருக்கும் செயலின் நன்மை, தீமையை அது பற்றிய பட்டறிவுடையோருடன் கலந்துரையாடித் தெளிவான விளக்கத்தைப் பெற்ற பின்னர் செய்வதே செயல்வன்மையாகும்.

செயல்வன்மையுடையவர் எந்தச் செயலையும் நன்றாக எண்ணிப் பார்த்தே செய்வர். செய்த பின் ஆராய்வோம் என எண்ணி ஒரு செயலைச் செய்வது துன்பத்தையே தரும். செயல்வன்மை என்பது செயற்பாட்டின் நேர்த்தியையும் உள்ளடக்கிய ஓர் ஆற்றலாகும்.

செயலைத் தொடங்கும் முன்பாக அதனைச் செய்து முடிப்பதற்குரிய வாய்ப்புகளைக் கண்டறிய வேண்டும்.

குறிப்பாகப் பலருக்குப் பயன்தரும் செயலைச் செய்யும் போது அதற்கான காலம், களம், துணை பற்றிய தெளிவைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

பெரிய கட்டடம், மேம்பாலம், பெருவீதி, பள்ளி என்பவற்றை அமைக்கும் போது செயல்வன்மை இன்றியமையாதது. பலருடைய உழைப்பும் பெருந் தொகையான பொருளும் இச்செயற்பாட்டில் உள்ளடங்கி இருக்கும்.

அதனால் திட்டமிட்டுச் செயற்பட வேண்டும். குறிப்பிட்ட கால எல்லையில் அதைச் செய்து முடிக்க வேண்டும். செயற்கை நிலையான பொருட்களோடு இயற்கையின் துணையும் வேண்டும். எனவே எல்லாவற்றையும் எண்ணிச் செயற்பட வல்லவரே செயல் வன்மையுடையவராவார்.

இயற்கை நிலையிலே பல வளங்கள் இருந்த போதும் அவற்றைப் பயன்படுத்திச் செயற்படாதவரும் உளர். அவர்கள் தமது செயல்வன்மையைப் பயன்படுத்தாமல் வாழா இருப்பர். எமக்கு உண்பதற்கு ஒன்றுமில்லையே என வறுமை பாராட்டி வாழ்வர். தாம் வாழும் வளமான மண்ணைப் பயன்படுத்தி உணவு தேடாது வருந்துவர்.

அவ்வாறு செயலற்று இருப்பவரைக் காணும் போது "நிலம் என்னும் நல்லாள் நகைப்பார்" எனத் திருக்குறள் பதிவு செய்துள்ளது.

இயற்கையின் பெருங்கொடையான மழையையும் வளமான மண்ணையும் செயல்வன்மையோடு பயன்படுத்தினால் பலருக்கு உணவு அளிக்கலாம். செயல் வீரர் என வையகம் அவரை வாழ்த்தி நிற்கும்.

இன்று செயல்வன்மையை வெளிப்படுத்தப் பல நிர்வாகக் கட்டமைப்புகள் உருவாகியுள்ளன. அதனால் செயலகம், செயலாளர் என்ற சொற்களும் பயன்பாட்டில் வந்துவிட்டன.

பணிமனைகளில் மட்டும் செயல்வன்மை தேவை என்ற கோட்பாடும் தோன்றிவிட்டது. இன்னும் விஞ்ஞானப் பொறிமுறைகளின் கையாட்சித் தேர்ச்சியும் "செயல்வன்மை" என்ற நிலையில் பெரிதும் மதிக்கப்படுகின்றன. நான்கு சுவர்களுக்குள்ளே இருந்து கணிப்பொறியின் இயக்கத் தேர்ச்சியால் செயல்வன்மை வெளிப்படுத்தப்படுகிறது. வன்முறையான செயற்பாடுகளும் இவ்வாறு நடைபெறுகின்றன.

மனிதனும் தன்னை ஓர் எந்திரமாக மாற்றும் முயற்சியில் விருப்போடு நாளும் செயலாற்றுகிறான்.

உடல், உள வள நிலையில் இச்செயல்வன்மையால் புறத்தாக்கங்கள் இல்லாவிட்டாலும் அகத் தாக்கங்கள் ஏற்படும் நிலையை எல்லோருமே உணர்வர்.

எனினும் அச் செயல்வன்மையே பெரிதென எண்ணுகின்றனர்.

இளையவரின் எதிர்கால வாழ்வியல் எத்திரமயப்பட்டு உணர்வழிந்து நிற்க நேருமோ என்ற அச்சம் தோன்றியுள்ளது. இவ்வச்சம் அகல எல்லோரும் ஒன்றிணைய வேண்டும்.

# இராசிபலன்

27.02.2026
மாசி 15, வெள்ளிக்கிழமை
ஏகாதசி முன்னிரவு 10.55 மணிவரை

திருவாதிரை முற்பகல் 11.14 மணிவரை
சுப நேரம் 6.29-7.59 மணிவரை
இராகுகாலம் 10.59-12.29 மணிவரை
ஏகாதசி விரதம்

சந்திராஷ்டமம்: சே[illegible]வன்



மேஷம்

ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.



கடகம்

பணப்புழக்கம் அதிகரித்தாலும் அடுத்த டுத்த செலவுகளும் ஏற்படலாம், அன்றாட பணிகள் நன்றாக நடைபெற இறைவனைப் பிரார்த்திப்பீர்கள், சயனசுக குறைவுகள் ஏற்படலாம்.



துலாம்

விட்டுப்போன உறவுகள் மீண்டும் வந்து சேரலாம், தடைகளைத் தகர்த்து தன்னிறைவு காணும் நாள், பயணங்களால் பலனுண்டு, ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.



மகரம்

கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், வழிபாட்டில் ஆர்வம் கூடும், தேவைகள் பூர்த்தியாகும் வாய்ப்புண்டு, பொது வாழ்வில் கௌரவம் கூடும்.



ரிஷபம்

வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, புதிய முயற்சி ஒன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம்.



சிம்மம்

இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், உன்னதமான வாழ்வுக்கு அடித்தளம் அமைக்கும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், காரிய அனுகூலம் உண்டு.



விருச்சிகம்

தேக நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், மனச்சஞ்சலங்கள் சற்றுக்கூடும், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.



கும்பம்

தொழிலை விருத்தி செய்யும் எண்ணம் உருவாகும், பிள்ளைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பூர்வீக சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.



மிதுனம்

எப்படி நடக்குமோ என நினைத்த காரியம் நல்லவிதமாக அமையலாம், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.



கன்னி

உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், நிலையான வருமானத்திற்கு வழி பிறக்கும், செயற்பாடுகளில் உற்சாகம் கூடும்.



தனுசு

பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.



மீனம்

உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வாகன சுகமுண்டு, மனதில் இனம்புரியாத சந்தோஷம் குடிகொள்ளும், சுபவிரயங்கள் கூடும்.

**நண்பன் உண்மையானவனாயின் உன்னை எச்சரிப்பான்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனம் 01 (III)




புருசோத்தமன்

(நேற்றைய தொடர்ச்சி)

யாழ்.போதனா வைத்தியசாலையில் மருத்துவ நிபுணர்கள் நோயாளர்களைப் பார்வையிடுவதாக இருந்தால், வைத்தியசாலை விடுதியில் தங்கினால் மட்டுமே அது சாத்தியமாகும்.

நோயாளர்களைப் பொறுத்த வரை மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகளையும் சிகிச்சைகளையும் பெற்று, உடன் வீடு திரும்ப வேண்டும் என்பதே அவர்களின் நிலைப்பாடாக உள்ளது.

எனினும் நோயாளர்களின் அந்த நோக்கம் யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகக் கட்டமைப்பில் சாத்தியமாகாது எனும் போது, தனியார் வைத்தியசாலைகளை நாடுகின்ற நிலைமை ஏற்படுகின்றது.

பொதுவில் நம் தமிழ்ச் சமூகம் என்பது சோலிகளுக்குள் வாழ்ந்து கொண்டிருப்பது.

அவர்களால் ஒரு மணி நேரத்தை ஒதுக்குவதென்பது கூட முடியாத காரியம். அதிலும் ஓய்வு நேரம் என்ற விடயம் அவர்களின் அகராதியில் இல்லை.

இந் நிலைமையானது மனித வாழ்வியலுக்கு ஆரோக்கியமானதல்ல.

இதன் காரணமாகவே ஒரு நாளும் மருத்துவ பரிசோதனையை - வைத்தியசாலைப் படிகளை தாண்டாமலே குறிப்பிட்ட இளம் வயதினர் திடீர் மரணத்தைச் சந்தித்துள்ளனர்.

எனவே வைத்தியசாலை விடுதியில் தங்குவதை நம்மவர்கள் விரும்பாத காரணத்தால், வைத்திய நிபுணர்களைத் தனியார் வைத்தியசாலைகளில் சந் திப்பதற்கான உந்தல் ஏற்படு கின்றது.

இதற்கு மேலாக, யாழ். போதனா வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்கள் மூன்று நான்கு நாட்களாக விடுதி யில் தங்கி இருந்த போதி லும் "பெரிய டாக்குத்தர் இன்னமும் பார்க்கவில்லை. அவர் பார்த்த பின்பு தான் துண்டு வெட்டுவது பற்றித் தீர்மானிக்கப்படும்" என்ற அப்பாவி நோயாளர்களின் வாக்கு மூலத்தை இன்னமும் வைத்தியசாலைச் சுவர்கள் காது குடுத்துக் கேட்டுக் கொண்டே இருக்கின்றன.

இஃது அனைத்து மருத்துவ நிபுணர்கள் சார்ந்த கருத்தாக இல்லாவிட்டாலும் மேற்போந்த விடயம் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நோயாளர்களில் அதிகமானவர்களால் உச்சரிக்கப்படுவது என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

இங்கு தான் தனியார் வைத்தியசாலைகள் ஒருபடி மேல் சென்று, நோயாளி அனுமதிக்கப்பட்ட அடுத்த கணமே மருத்துவ நிபுணர்களின் தரிசனத்தை நிதர்சனமாக்குகின்றன.

இந்த நிலைமை நாள் கடக்க கடக்க தனியார் வைத்தியசாலைகளிலும் தோல்வி காண்பதாக இருந்தாலும் நோயாளியை அனுமதித்தவுடன் அங்கு நடந்தாகின்ற படோபகாரங்கள் - சுற்றிச் சூழ்ந்து நிற்கும் தனியார் வைத்தியசாலைப் பணியாளர்கள் என, ஏதோ போன உயிரையும் மீட்பது போல தடல் புடல் நடப்பதால், நம்மவர்களும் அந்த போலிக்குள் புதையுண்டு போகின்றனர்.

இங்கு தான் காசு போனாலும் பரவாயில்லை தனியார் வைத்தியசாலைக்குப் போகலாம்.

அங்கு அனுமதிக்கப்பட்டால், நோயாளியுடன் நின்று பராமரிப்பதும் சுலபம் என்ற கட்டத்தில் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபலமான தனியார் வைத்தியசாலைகள் தேர்த் திருவிழா போல ஆகிவிடுகின்றன.

இங்குதான் மாற்று வழிகள் பற்றி யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் உள்ளிட்ட வைத்தியசாலை நிர்வாகம் ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டிய கட்டத்திற்கு ஆட்படுகின்றது.

ஆம், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுபவர்கள் மற்றும் கிளினிக் வருகின்றவர்கள் ஒரு புறமிருக்க, வைத்தியசாலை விடுதியில் அனுமதிக்கின்ற நோய் நிலையுடன் வருகின்றவர்கள் தொடர்பில் விசேட கவனம் செலுத்துவது இங்கு முதன்மைக்குரியதாகிறது.

அதாவது, யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலைக்கு கடுமையான நோயுடன் வருகின்றவர்களை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கின்ற நடைமுறை உண்டு.

முன்பு அவசர சிகிச்சை என்பதாக இருந்த பிரிவு இப்போது விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவாக முன்னேற்றம் கண்டுள்ளது.

இப் பிரிவில் நோயாளர்கள் அனுமதிக்கப்படுகின்ற போது மருத்துவர்களின் நேரடிக் கண்காணிப்பிற்குள் நோயா ளர்கள் வந்து விடுகின்றனர்.

இந் நிலைமையானது நோயார்களின் குடும்பத்தினரை - அவர்களின் நெருங்கிய உறவினர்களை ஆற்றுப்படுத்துகிறது.

அதாவது, நோயாளியை மருத்துவர்களிடம் ஒப்படைத்துவிட்டோம். அவர்களின் தீவிர கண்காணிப்பிற்குள் இப்போது நோயாளி இருப்பதால், அங்கு ஒரு பலமான நம்பிக்கை ஏற்படுகிறது.

தவிர, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்படுகின்ற நோயாளி, மருத்துவக் கண்காணிப்பினூடு கூடிய சிகிச்சையில் குணமடைந்து விட்டால், அந்த நபர் அவசர சிகிச்சைப் பிரிவில் இருந்தவாறே வீடு செல்வதற்கான சந்தர்ப்பம் உண்டு.

இது சம்பந்தப்பட்டவருக்கும் அவரது குடும்பத்திற்கும் ஆத்ம திருப்தியை அளிப்பதுடன் தங்கள் உறவின் உயிரை யாழ். போதனா வைத்தியாசாலை காப்பாற்றியது என்ற உணர்வும் பொது வெளியில் ஏற்படுகிறது.

எனவே அவசர சிகிச்சைப் பிரிவை விஸ்தரித்து அதற்கான வள ஒதுக்கீடுகளைச் செய்யும் போது, யாழ்.போதனா வைத்தியசாலையின் நுழைவாயிலைக் கடந்த கணத்திலேயே மருத்துவ உதவி- மருத்துவ சிகிச்சை கிடைத்ததான மன நிம்மதியும் பொது மக்களிடம் ஏற்படும்.

இஃது யாழ்.போதனா வைத்தியசாலை மீதான நம்பகத்தன்மையை பொது மக்கள் மத்தியில் பரவலாக்கும் என்பதில் ஐயம் ஏதுமில்லை.

திங்கள் தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 988





அப்போது இடையிடையே மணிமேகலை வந்தியத்தேவனை நோக்கினாள். அவனுடைய மனதில் ஏதோ சங்கடம் ஏற்பட்டிருக்கிறதென்றும், இளவரசரும் நந்தினியும் அவனுக்கு ஏதோ தொல்லை கொடுக்கிறார்கள் என்றும் அவள் தன் உள்ளுணர்ச்சியால் அறிந்தாள்.

"யார் தங்களுக்கு எதிரியானாலும் நான் தங்களுடைய கட்சியில் இருப்பேன் கவலைப்பட வேண்டாம்!" என்று நயன பாஷையின் மூலம் வந்தியத்தேவனுக்கு ஆறுதல் கூற முயன்றாள். ஆனால் வந்தியத்தேவனோ அவள் பக்கம் திரும்பிப் பார்க்கவே இல்லை. அவன் கவலைக் கடலில் அடியோடு மூழ்கிப் போனவனாகக் காணப்பட்டான்.

நந்தினி தேவியின் வஞ்சக வார்த்தைகளும் வந்தியத்தேவன் மீது அவள் சுமத்திய பயங்கரமான பழியும் இந்தக் கதையைத் தொடர்ந்து படித்து வரும் நேயர்களுக்கு அருவருப்பை அளித்திருக்கக் கூடியது இயல்பேயாகும்.

எனினும், நாம் அறிந்துள்ள வரையில் அவளுடைய பிறப்பையும் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் நினைவு கூர்ந்தால் அவ்வளவாக வியப்பு அடைய மாட்டோம். மனிதர்களின் குணாதிசயங்கள் பரம்பரை காரணமாக இரத்தத்தில் ஊறியுள்ள இயல்புகளில் அமைகின்றன.

சூழ்நிலையினாலும் பழக்கவழக்கங்களினாலும் வாழ்க்கை அனுபவங்களினாலும் மாறுதலடைகின்றன. ஊமையும் செவிடுமான மந்தாகினி காட்டிலே பெரும்பாலும் வாழ்ந்திருந்தவள். வன விலங்குகளிடமிருந்து தப்பித்துக் கொள்ள அவள் எவ்வளவோ ஜாக்கிரதையாயிருக்க வேண்டியிருந்தது. தான் உயிர் தப்புவதற்காகச் சில சமயம் அந்த மிருகங்களைக் கொடூரமாகக் கொல்ல வேண்டியும் நேர்ந்தது.

வெகுகாலம் வரையில் பால்போல் தூய்மையாக இருந்த அவள் உள்ளத்தில் ஒரு சமயம் அன்பு என்னும் அமுத ஊற்றுச் சுரந்தது. விரைவில், அந்த ஊற்று வறண்டு அவளுடைய நெஞ்சத்தை வறண்ட பாலைவனம் ஆக்கியது.

விதியின் விளையாட்டு அவளை ஒரு பெரிய ஏமாற்றத்துக்கு உள்ளாக்கி விட்டது. அதனால் ஏற்பட்ட அதிர்ச்சி அவளுடைய புத்தியே பேதலித்துப் போகும்படி செய்துவிட்டது. எனினும், நாளடைவில் அவளுடைய நெஞ்சின் காயம் ஆறியது. அன்பாகிய அமுத ஊற்று மீண்டும் சுரந்தது. சுந்தர சோழரின் மீது கொண்ட காதலையெல்லாம் அவருடைய அருமைப் புதல்வனாகிய அருள்மொழிச் செல்வனிடம் பிள்ளைப் பிரேமையாக மாற்றிக் கொண்டாள்.

மந்தாகினியின் புதல்வியாகிய நந்தினியிடம் தாயின் குணாதிசயங்கள் பல இயற்கையில் தோன்றியிருந்தன. ஆனால் தாயை உலகம் வஞ்சித்ததைக் காட்டிலும் மகளை அதிகமாக வஞ்சித்தது. பெற்ற தாயினாலும் கைவிடப்பட்டாள். பிறர் வீட்டில் வளர்ந்தாள். காட்டு மிருகங்களினால் அன்னைக்கு ஏற்பட்ட தொல்லைகளைக் காட்டிலும் நாட்டு மனிதர்களால் மகள் அதிகக் கொடுமைகளுக்கு உள்ளானாள்.

இளம் பிராயத்தில் அரச குலத்தினரால் அவமதிக்கப்பட்டதெல்லாம் அவளுடைய நெஞ்சில் வைரம் பாய்ந்து நிலைத்து விஷத்தினும் கொடிய துவேஷமாக மாறியது.(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நிமிர்த்த முடியாத நாய் வால்கள்



முன்னொரு காலத்தில் நாய்கள் எல்லாம் ஒன்று கூடி கூட்டம் நடத்தின. ஒரு கிழட்டு நாய் சொன்னது, "நாம் ஒவ்வொரு முறையும் பல குட்டிகளைப் பெற்றெடுக்கிறோம். ஆனால் ஆடுகளோ ஒரு முறைக்கு ஒரு குட்டி போடுகின்றன. நம்மினமோ நாளுக்கு நாள் குறைந்து கொண்டே போகிறது. ஆடுகளின் இனமோ பெருகிக் கொண்டே செல்கிறது. இது இயற்கை விதிக்கு மாறானது. நம்மினம் அழிவதற்குக் காரணம் என்ன?" என்று கேட்டது.

அதற்கு இன்னொரு நாய், "இது கடவுளுடைய சூழ்ச்சி தான். நம்மினத்தின் மீது கடவுள் ஏனோ கோபம் கொண்டுள்ளார். அதனால் தான் நாம் அழிந்துகொண்டு வருகிறோம். நாம் அனைவரும் கடவுளிடம் சென்று எங்கள் இனத்தைக் காரணமின்றி எதற்காக அழிக்கின்றீர்கள்? இனியாவது காப்பாற்றுங்கள் என்று வேண்டுவோம்" என்று சொன்னது.

எல்லா நாய்களும் இதற்கு உடன்பட்டுக் கடவுளிடம் சென்றன. அவரைப் பார்த்து, "எல்லோரிடமும் ஒரே அளவாக அன்பு பாராட்ட வேண்டிய தாங்கள், ஆடுகளிடம் அதிக அன்பும் எங்களிடம் வெறுப்பும் காட்டி வருகின்றீர்கள். இது ஏன்?" என்று கேட்டன.

"நான் எல்லோரையும் ஒன்றாகத்தான் நடத்துகின்றேன். என்னிடம் ஏற்றத் தாழ்வு இல்லை. உங்களிடம் ஒற்றுமை இல்லாததால் நாளுக்கு நாள் எண்ணிக்கையில் குறைந்து கொண்டே வருகின்றீர்கள், ஆடுகளிடம் ஒற்றுமை இருப்பதால் அவை பெருகிக் கொண்டே செல்கின்றன" என்றார். இதைக் கேட்ட நாய்கள், "எங்களிடம் ஒற்றுமை இல்லை என்றா சொல்கிறீர்கள்? நாங்கள் ஒப்புக் கொள்ள மாட்டோம்" என்றன.

கடவுள் அவைகளுக்கு உண்மையை உணர்த்த விரும்பினார். பத்து ஆடுகளை ஓர் அறையிலும் பத்து நாய்களை மற்றோர் அறையிலும் அடைத்து வைத்தார். மறுநாள், ஆடுகள் இருந்த அறையைத் திறந்தார்.

ஒற்றுமையாக இருந்த ஆடுகள் ஒன்றன்பின் ஒன்றாக வெளியே வந்தன. பிறகு நாய்கள் இருந்த அறையைத் திறந்தார். உள்ளே இருந்த நாய்கள் ஒன்றோடொன்று போரிட்டதால் குற்றுயிரும் குலையுயிருமாய் முனகிக் கொண்டு கிடந்தன. அவற்றால் வெளியே வரக்கூட முடியவில்லை.

நடந்ததை எல்லாம் பார்த்த நாய்கள் தங்களிடம் ஒற்றுமை இல்லையே என்று தலை கவிழ்ந்தபடி வெளியேறின.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் உழைத்த பணத்தை வங்கியில் போடாமல் உன் உணவுக்காக மண்ணில் போடுகின்றான் விவசாயி. - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நெற்செய்கையாளர்களின் குற்றச்சாட்டு ஆராயப்படுமா?

2025ஆம் ஆண்டு காலபோக நெற் செய்கை கடும் மழை காரணமாகப் பெரும் பாதிப்படைந் துள்ளது.

இதனால் நெற்செய்கையாளர்கள் கடும் நட்டத்தை எதிர்கொண்டுள்ளனர்.

அதேநேரம் நெற்செய்கை பாதிப்புத் தொடர் பில் அரசாங்கத்தால் வழங்கப்பட்ட நிவாரணக் கொடுப்பனவுகள் தமக்குக் கிடைக்கவில்லை என ஆதங்கப்படும் வேளாண் விவசாயிகள்; நெற்செய்கையில் தமக்கு ஏற்பட்ட பாதிப்பு களைப் பதிவு செய்ய அந்தந்த கமக்கார அமைப்பு கள் மறுத்துவிட்டதாகவும் கூறுகின்றனர்.

அதேநேரம் கமக்கார அமைப்புகளில் முக் கிய பதவிகளில் இருப்பவர்களும் அவர்களின் உறவினர்களும் முழுமையாகப் பாதிக்கப்பட்ட நெற்செய்கையாளர்களாகப் பதிவு செய்து, இலட்சக்கணக்கான ரூபாய்களை இழப் பீடுகளாகப் பெற்றுள்ளனர் என்றும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதுதவிர, கமத்தொழில் சேவைகள் நிலை யத்தின் கனிசமான வெளிக்கள உத்தியோகத் தர்கள் கமக்கார அமைப்புகளுடன் மட்டும் கலந்துரையாடி விட்டு அவர்களுக்கு ஒத்திசை வாகச் செயற்பட்டுள்ளனர்.

அதுபோல சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் களுடன் சேர்ந்து பக்கப்பாட்டு பாடுகின்றவர் களாக கமக்கார அமைப்புகள் இருப்பதாகவும் பாதிக்கப்பட்ட விவசாயிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுக்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

ஆம், வழமையில் இருபத்தைந்து மூடை நெல்லை அறுவடை செய்கின்ற ஒரு விவசாயி மூன்று மூடை நெல்லை மட்டுமே அறுவடை செய்தபோதிலும் அந்த விவசாயிக்கு எந்தவித நட்டஈடும் கிடைக்கவில்லை.

ஆம், பகுதியாக ஏற்பட்ட நெற் பயிர் அழி வைப் பதிவு செய்வதற்கு கமக்கார அமைப்பு கள் மறுத்துவிட்டதன் காரணமாக எத்தனையோ விவசாயிகள் பெரும் நட்டத்தைத் தங்கள் தலையில் சுமந்துள்ளனர்.

எனவே டித்வா புயல் மற்றும் கடும் மழை காரணமாக நெற்செய்கையில் பாதிப்படைந் திருந்தும் கமக்கார அமைப்புகளின் பொறுப் பற்ற செயற்பாடும் சுயநல நோக்கமும் காரண மாக, இழப்பீடுகளைப் பெற முடியாமல் போன விவசாயிகள் தொடர்பில் அரசாங்கம் மீளாய்வு செய்ய வேண்டும்.

இதற்கும் மேலாக, நெற்செய்கையில் முழு நட்டம் எனப் பதிவு செய்து இலட்சக்கணக்கில் நட்டஈட்டைப் பெற்ற கமக்கார அமைப்புச் சார்ந்த வர்கள் மற்றும் அவர்களின் உறவினர்கள் மேலும் முழுமையான நட்டஈட்டை பெற்றவர் கள் உண்மையிலேயே பாதிப்படைந்தவர் களா? அல்லது ஊழல் புரிந்தார்களா? என் பதை கணக்காய்வுத் திணைக்களம் கண்டறி வது அவசியம்.

அதேநேரம் ஒரே தரப்பு தொடர்ந்தும் கமக் கார அமைப்பை கட்டியாளுகின்ற ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு, புதியவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்க கமநல சேவை நிலையங்கள் முன்வர வேண்டும். இதைச் செய்யாதவிடத்து ஊழலை ஒழிப்பது நடவாத காரியம்.

# மனித உரிமைகளை மீறும் பயங்கரவாத சட்டம் தேவையில்லை

## சாவகச்சேரி நகர சபையில் தீர்மானம்

மனித உரிமை களை மீறும் எந்த வொரு பயங்கரவாதத் தடுப்புச் சட்டமும் தேவையில்லை என சாவகச்சேரி நகர சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப் பட்டுள்ளது.

சாவகச்சேரி நக ராட்சி மன்றின் மாதா ந்த அமர்வு நேற்று தவிசாளர் வ.ஸ்ரீபிர காஸ் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது உப தவிசாளர் ஞா.கிஷோர் புதிய பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர் பான பிரேரணை யினை சபையில் முன்வைத்து உரை யாற்றினார்.

இதன் போது தேசிய மக்கள் சக்தி யின் உறுப்பினர்கள் சபை நிகழ்ச்சி நிர லில் உள்ளடக்கப் படாத குறித்த விட யத்தினை சபையில் பிரேரிக்க முடியாது என தமது எதிர்ப்பை வெளியிட்டனர். எனி னும் தேசிய மக்கள் சக்தியின் 3 உறுப்பி னர்கள் தவிர்ந்த ஏனைய உறுப்பினர் களின் ஆதரவோடு பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான பிரேரணை நிறைவே ற்றப்பட்டது. (ம-7,104)

## அறநெறிப் பாடசாலை அங்குரார்ப்பண நிகழ்வு

(கிளிநொச்சி)

பளை இரட்டைக் கேணி கண்ணகை அம்மன் ஆலய அற நெறிப் பாடசாலை யின் அங்குரார்ப்பண நிகழ்வானது இன்று (27) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிய ளவில் ஆலய மண்ட பத்தில் இடம்பெறவு ள்ளது.

ஆலய அறநெறிப் பாடசாலையின் இணைப்பாளர் திரவி யரத்தினம் தலை மையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பச் சிலைப்பள்ளி பிரதேச செயலர் ஜெயசீலன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பிக்கவு ள்ளார். (ம-7)

## மறைந்த பெருந்தலைவர் நல்லக்கண்ணுக்கு யாழில் நினைவஞ்சலி

இந்திய கம்யூனி ஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒரு வரான பெருந்தலை வர் இரா.நல்லக்கண் ணுவின் மறைவை யொட்டி நினைவஞ் லிக் கூட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை காலை 10 மணிய ளவில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா அர ங்கில் இடம்பெறவு ள்ளது.

இவ் அஞ்சலி நிகழ் வில் அரசியல் அமை ப்புகள், அரசுசாரா அமைப்புகள், பொது மக்கள் உள்ளிட்ட அனைவரையும் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அழைப்பு விடுத்துள் ளனர். (ம-7)

## கிளிநொச்சியில் விபத்து; மாணவன் படுகாயம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்று மாலை இடம் பெற்ற விபத்தில் மாணவன் ஒருவர் படு காயமடைந்துள்ளார்.

வேகக் கட்டுப்பா ட்டை இழந்த மோட் டார் சைக்கிள் விப த்துக்குள்ளானதில் மோட்டார் சைக்கி ளில் பயணித்த மாண வன் படுகாயங்களு டன் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ள்ளார்.

தற்போது நடை பெற்றுவரும் க.பொ.த சாதாரண தரப் பரீட் சைக்கு தோற்றிய மாணவனே இவ்வாறு விபத்தில் சிக்கியுள் ளார்.

நேற்று பரீட்சை எழுதிவிட்டு வீட்டுக்கு வந்து மோட்டார் சைக் கிளை எடுத்து கடை க்கு சென்றவேளையே இந்த விபத்துச் சம்ப வம் பதிவாகியுள்ளது. (ம-7)

## வறுமைக்கோடு ஜனவரி அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டின் உத்தி யோகபூர்வ வறுமைக் கோடு ஜனவரி மாதத் தில் அதிகரித்துள்ள தாகத் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளி யிட்டுள்ள புதிய அறி க்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

2025 டிசம்பர் மாதத் துடன் ஒப்பிடுகை யில், அத்தியாவசியத் தேவைகளுக்கான செலவு அதிகரித்துள் ளதை இது காட்டு கிறது.

தனிநபர் ஒருவர் தனது அடிப்படைத் தேவைகளான உணவு, தங்குமிடம் மற்றும் ஆரோக்கியம் ஆகியவற்றைப் பூர் த்தி செய்யத் தேவை ப்படும் குறைந்தபட்ச வருமானமே உத்தி யோகபூர்வ வறுமைக் கோடு என அழைக் கப்படுகிறது.

நாடளாவிய ரீதி யில் 2025 டிசம்பரில் ரூ. 16,658 ஆக இரு ந்த வறுமைக் கோடு, 2026 ஜனவரியில் ரூ. 16,730 ஆக உயர்ந் துள்ளது. வாழ்க்கைச் செலவு அதிகமாகக் காணப்படும் கொழு ம்பு மாவட்டத்தில் வறுமைக் கோடு ரூ. 18,044 ஆகப் பதிவா கியுள்ளது.

கொழும்பு, கம் பஹா மற்றும் நுவரெ லியா போன்ற மாவட் டங்களில் வசிப்பவர் கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெற் றுக்கொள்வதற்கு மற் றைய மாவட்டங் களை விட அதிக வரு மானத்தைக் கொண் டிருக்க வேண்டியுள் ளது.

குறிப்பாக மொன ராகலை மாவட்டத் தில் மிகக் குறைந்த வறுமைக் கோடு பதி வாகியுள்ளது.

பொருட்களின் விலைவாசி உயர்வு மற்றும் பணவீக்கம் காரணமாக இந்த வறு மைக் கோடு தொடர் ந்து அதிகரித்து வரு கின்றமை குறிப்பிடத் தக்கது. (ம-7)

## கம்பஹாவில் விபத்து லொறி சாரதி உயிரிழப்பு

கம்பஹா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கம் பஹா - ஜா-எல வீதி யில் நேற்று வியாழ க்கிழமை (26) அதி காலை இடம்பெற்ற விபத்தில் லொறி சாரதி ஒருவர் உயிரிழந்துள் ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜா-எல நோக்கிப் பயணித்த லொறியொ ன்று, எதிர்த்திசையிலி ருந்து வந்த சிறிய லொறி யுடன் மோதி விபத்து க்குள்ளாகியுள்ளது.

விபத்தில் படுகாய மடைந்த லொறி சாரதி கம்பஹா வைத்திய சாலையில் அனும திக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவர் ஜா-எல பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் விபத் துடன் தொடர்புடைய மற்றைய லொறியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டு ள்ள நிலையில் கம் பஹா பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடாவடிக் கோட்டை

## அமெரிக்க உளவுத்துறை சிஐஏ வரலாறு 33

என்.சொக்கன்

அமெரிக்கா முழுவதும் எங்கெங்கோ, என்னென்னவோ தாக்குதல்கள் நடக்கப்போவதாகச் செய்திகளைக் கசியவிட்டார்கள். விதவிதமான பெயர்கள், தொலைபேசி எண்கள், முகவரிகள் என்று தகவல்கள் வந்து குவிந்தன.

இவற்றில் பெரும்பாலானவை பொய்த் தகவல்கள் அல்லது கடைசி நேரத்தில் வேண்டுமென்றே மாற்றப்பட்டுவிட்ட தகவல்கள். 9/11 தாக்குதலுக்குப் பிறகு, அதுபற்றி விசாரணை நிகழ்த்திய குழுவினர் "அல் காய்தாவின் முந்தைய தாக்குதல் முயற்சிகள் பற்றி சிஐஏவுக்கு என்னவெல்லாம் தகவல்கள் கிடைத்திருந்தன?" என்று கேட்டபோது, ஆயிரக்கணக்கான பக்கங்கள் கொண்டுவந்து கொட்டப்பட்டன.

இப்படித் தவறான தகவல்களைத் தொடர்ந்து பார்த்துக் கொண்டிருந்த சிஐஏவுக்கு, ஒரு கட்டத்தில் இந்த விளையாட்டு சலித்துப் போயிருக்க வேண்டும். அதன்பிறகு, அவர்களிடம் யாரேனும் வந்து, "ஒஸாமாவின் ஆள்கள் நான்கு விமானங்களைக் கடத்தி, அமெரிக்காவின் முக்கியக் கட்டடங்கள் மீது மோதப் போகிறார்கள் என்று நேரடியாகச் சொல்லியிருந்தால் கூட, "கதை நன்றாக இருக்கிறதே, ஹாலிவுட்டுக்கு முயற்சி செய்யுங்கள்" என்றுதான் பதில் வந்திருக்கும்.

ஒஸாமா பின்லேடன் விரும்பியதும் அதைதான். அமெரிக்கா சற்றும் எதிர்பாராத நேரத்தில், அவர்கள் கொஞ்சமும் நினைத்துப் பார்க்காத விதத்தில் ஒரு தாக்குதல் நிகழ்த்த வேண்டும் என்று திட்டமிட்டிருந்தார் அவர். இதற்காக அவர் தேர்ந்தெடுத்திருந்த நாள், 2001, செப்ரெம்பர் 11.

பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தாண்டி, 9/11 தாக்குதல் எப்படி நிகழ்ந்தது என்பதற்கும் சிஐஏவுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை. ஆனால், இப்படி ஒரு தாக்குதல் திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதைக் கூட அவர்கள் முன்கூட்டியே அறியாமல் விட்டது எப்படி?

முதலாவதாக, கட்டடங்களைத் தேடிப் பிடித்து, இரகசியமாகக் குண்டு வைப்பதிலிருந்து பரிணாம வளர்ச்சி பெற்று, விமானங்களையே மகா வெடிகுண்டுகளாகப் பயன்படுத்தலாம் என்று சிந்திக்கத் தொடங்கியிருந்தது அல் காய்தா. இப்படிப்பட்ட ஒரு தாக்குதலுக்கு முன்னுதாரணங்களே இல்லை என்பதால், இந்தவிதத்தில் தங்களுடைய இலக்குகள் தாக்கப்படலாம் என்று சிஐஏ மட்டுமல்ல, யாராலும் ஊகித்திருக்க முடியாது.

அடுத்து, இரகசியம் அறிவதில் சிஐஏ கில்லாடி என்றால், இரகசியம் காப்பதில் அல் காய்தா. அமெரிக்கா மீது இப்படி ஒரு தாக்குதல் நிகழ்த்தப் போகிறோம் என்கிற செய்தி, அந்த இயக்கத்தின் உள்வட்டத்தில் ஒன்றிரண்டு பேருக்கு மட்டுமே தெரிந்திருந்தது.



இவ்வளவு ஏன், நிஜமாகவே விமானங்களைக் கடத்தி, அமெரிக்க இலக்குகளின் மீது மோதுவதற்காகப் பயிற்சி பெற்ற இளைஞர்களுக்குக்கூட, யார் யார் இந்தத் திட்டத்தில் பங்கு பெறுகிறார்கள் என்கிற விபரம் கடைசி நேரம் வரை சொல்லப்படவில்லை. தாக்குதல் எப்போது என்கிற விடயமும் பரம இரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

கடைசியாக, அமெரிக்காவில் CIA, FBI என இரண்டு உளவு அமைப்புகள் எலியும் பூனையுமாக இருப்பதும் அல் காய்தாவுக்கு வசதியாகிவிட்டது. சிஐஏ, வெளிநாட்டில் அல் காய்தா என்ன செய்கிறது என்பதை மட்டும் கவனித்துக் கொண்டிருந்தது. FBI உள்நாட்டில் நடக்கிறவற்றை உளவு பார்த்துக் கொண்டிருந்தது. இந்த இரண்டுக்கும் நடுவே ஒரு ரோடு போட்டு விட்டார் ஒஸாமா பின்லேடன்.

அதாவது, அமெரிக்காவுக்கு வெளியில் ஏதேனும் சதி செய்தால், சிஐஏ மோப்பம் பிடித்து விடும். ஆனால், அமெரிக்காவினுள் நடக்கிற விடயங்களை அவர்கள் கண்டு கொள்ள மாட்டார்கள். FBI இதற்கு நேரெதிராக வெளிநாட்டு விவகாரங்களைப் பற்றி அக்கறை காட்டாது.

ஆக, வெளியிலிருந்து சிலரை அமெரிக்காவினுள் வரவழைத்தால், இந்த இரண்டு அமைப்புகளுக்கும் தண்ணி காட்டிவிடலாம் என்று தீர்மானித்தது அல் காய்தா. CIA, FBI இடையில் தகவல் பரிமாற்றம் நிகழ்வதற்குள் குண்டு வெடித்து விடலாம் என்பது அவர்களுடைய திட்டம்.

எல்லாம், பின்லேடன் நினைத்தது போலவே நடந்தது. இந்தத் திட்டத்துக்கென பத்தொன்பது இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, தனித்தனியே அமெரிக்காவினுள் அனுப்பி வைத்தார்கள். அவர்களில் சிலர் அங்கேயே விமானம் ஓட்டப் பயிற்சி பெற்றுக்கொண்டார்கள். மற்றவர்கள் தினந்தோறும் உடற்பயிற்சி செய்து உடம்பைத் தேற்றினார்கள்.

இவர்களில் சிலர் மீது, ஏற்கெனவே சிஐஏவின் சந்தேகப் பார்வை விழுந்திருந்தது. அமெரிக்காவுக்கு வெளியே அவர்கள் சுற்றிக் கொண்டிருந்தவரை, ஏதோ சில்மிஷம் செய்யப்போகிறார்கள் என்று கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், இந்த அல் காய்தா இளைஞர்கள், தங்களுக்கு வால் பிடித்துக்கொண்டிருந்த சிஐஏவை மிகத் திறமையாகத் துண்டித்துக் கொண்டு வெளியேறிவிட்டார்கள். அவர்கள் அமெரிக்காவினுள் வந்து சேர்ந்தபிறகு, சிஐஏவுக்கும் அவர்களுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்றாகிவிட்டது. உள்ளூரிலும், FBI மற்ற பாதுகாப்பு அமைப்புகள் இவர்களை மோப்பம் பிடிக்கவில்லை.

அதேசமயம், அமெரிக்காவுக்கு வெளியே உளவு பார்த்துக் கொண்டிருந்த சிஐஏவுக்கு, பல தகவல்கள் அரைகுறையாகக் கிடைக்கத் தொடங்கியிருந்தன.

அல் காய்தா மற்றும் அதன் சகோதர அமைப்புகள், ஏதோ பெரிய திட்டம் தீட்டியிருக்கிறார்கள். அதுபற்றி சங்கேதமாகப் பேசிக்கொள்கிறார்கள். அதன் வெற்றி மிகப் பெரிய சாதனையாக இருக்கும் என்று புளகாங்கிதம் அடைகிறார்கள் என்பது அவர்களுக்குத் தெரிய வந்தது.

இந்தத் தகவல்கள் அனைத்தும், அமெரிக்க ஜனாதிபதிக்கு சிஐஏ வழங்கும் தினசரி அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தன. இன்ன தேதியில் இது நடக்கப் போகிறது என்று சொல்ல முடியாவிட்டாலும், அல் காய்தா ஏதோ பெரிதாகச் செய்யப்போகிறார்கள் என்பதை அழுத்தமாகத் திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், வழக்கம்போல் அமெரிக்க அரசாங்கம் இதைக் கண்டு கொள்ளவில்லை. அப்போதும் அவர்கள், அல் காய்தா எங்காவது வெளிநாட்டில் அமெரிக்கத் தூதரகத்தின் மீது அல்லது அமெரிக்காவுக்கு நட்பாக இயங்கும் ஆட்சியாளர் மீது குண்டு வீசுவார்கள் என்றுதான் நினைத்துக்கொண்டிருந்தார்கள். உள்ளூரில் குண்டு விழும் என்று யாருக்கும் எண்ணத் தோன்றவில்லை.

2001ஆம் ஆண்டு செப்ரெம்பர் 11ஆம் தேதி, அல் காய்தாவின் தாக்குதல் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டது. பத்தொன்பது அல் காய்தா இளைஞர்கள் நான்கு அமெரிக்க விமானங்களைக் கைப்பற்றினார்கள். அவற்றில் இரண்டு, நியூயோர்க் WTC இரட்டைக் கோபுரங்களின் மீது மோதின. இன்னொன்று அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் கட்டடத்தைத் தாக்கியது. நான்காவது விமானம் மட்டும் தனது இலக்கை அடையாமல் பென்சில்வேனியாவில் விழுந்து சிதறியது. அமெரிக்காவை உலுக்கிப் போட்ட தாக்குதல் அது. இத்தனை ஆண்டுகளாக நாங்கள் வல்லரசாக்கும், எங்கள் மீது யார் கை வைக்க துணிவார்கள் என்று நெஞ்சி நிமிர்த்திய கர்வத்துக்கு, அன்று பலமான அடி விழுந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கச்சதீவு...

யாத்திரிகர்களுக்கு பின்வரும் பயண ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதன்படி இன்று (27) அதிகாலை 4.00 மணி முதல் பி.ப 01.00 மணி வரை அரச பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகள் யாழ்ப்பாணம் பேருந்து நிலையத்திலிருந்து குறிகாட்டுவான் இறங்குதுறை வரை சேவையில் ஈடுபடும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிகாட்டுவான் இறங்குதுறையில் இருந்து இன்று காலை 5.00 மணி முதல் பி.ப 02.00 மணி வரை கச்சதீவுக்கான படகுச்சேவைகள் இடம்பெறும். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2026.02.26
சீட்டிழுப்பு இலக்கம் 6117
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
D 9 1 1 1 1 6
அத சம்பத
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
D 1 1 1 6
சீட்டிழுப்பு இலக்கம் 0692
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

சுப தவசக்
2026.02.26
6233
கும்பம் 06 33 40
4984

தன நிதானய
திகதி - 2026.02.26
சீட்டிழுப்பு இலக்கம் - 2147
P 13 32 65 71 P
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance

மெகா பவர்
திகதி 26/02/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2465
C 19 13 31 34 47

ஜய JAYA
திகதி 2026.02.26
சீட்டிழுப்பு இலக்கம் 0385
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
B 6 5 5 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4359
சீட்டிழுப்பு திகதி 26.02.2026
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
B 05 18 32 36
B
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.02.26
சீட்டிழுப்பு இலக்கம் 1426
வெற்றி இலக்கங்கள்
கன்னி 12 14 15 56 கன்னி

## பஸ் மோதி...

முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பயணிகள் பஸ் ஒன்று குறித்த பெண் மீது மோதியுள்ளது.

இதன்போது, பலத்த காயங்களுக்குள்ளான பெண் வைத்தியசாலையில் அனுமதித்ததன் பின்னர் உயிரிழந்துள்ளதாக மதவாச்சி பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்த பெண் யாரென இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை. விபத்தின் பின்னர் பஸ் வண்டியின் சாரதியும் சாரதி உதவியாளரும் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## துணைவேந்...

யாழ்ப்பாண பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்புகள் பீடத்தின் பீடாதிபதியாகச் செயற்பட்டு வருகின்றார்.

தற்போதைய துணைவேந்தரின் பதவிக் காலம் எதிர்வரும் மார்ச் 24 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள நிலையில் எதிர்வரும் 25.03.2026 தொடக்கம் பேராசிரியர் தி.வேல்நம்பி துணைவேந்தராகப் பதவியேற்கவுள்ளார்.

யாழ்.பல்கலைக்கழகப் பதிவாளரால் கடந்த 2025 செப்ரெம்பர் முதல் வாரத்தில் துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த நிலையில் துணைவேந்தருக்கான தேர்தலில் அதிக புள்ளிகளைப் பெற்று முதன்மை நிலையை பேராசிரியர் வேல்நம்பி பெற்றிருந்தார்.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்களைத் தெரிவு செய்வதற்கான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கையின்படி, பேரவையின் விசேட கூட்டத்தில் விண்ணப்பதாரிகள் பெறும் புள்ளி ஒழுங்கில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு, கல்வி அமைச்சு ஆகியவற்றினூடாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்படும்.

1978ஆம் ஆண்டின் 16ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்படி ஜனாதிபதிக்குள்ள அதிகாரத்தின் அடிப்படையில், பேரவையினால் முன்மொழியப்பட்ட மூவரில் இருந்து ஒருவரை ஜனாதிபதி தெரிவு செய்வார்.

இந்த நிலையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பேராசிரியர் திருநாவுக்கரசு வேல்நம்பி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வணிகப் பட்டதாரியான பேராசிரியர் வேல்நம்பி இந்தியாவில் கலாநிதிப் பட்டத்தைப் பூர்த்தி செய்ததுடன் சர்வதேச கருத்தரங்குகளிலும் பங்கேற்றவர்.

யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கத்தின் தலைவரான இவர் சிறந்த பேச்சாளர் என்பதுடன் அகில இலங்கை அமுதசுரபி மன்றத்தின் அமைப்பாளர் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-7,104)

## மீன்பிடிக்கச்...

என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் இரவு வீச்சு வலைத் தொழிலில் ஈடுபடச் சென்ற நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ம-7)

## வவுனியா...

சிங்கள மொழியில் கலந்துரையாடல்கள் இடம்பெற்றமை சபையில் சலசலப்பை ஏற்படுத்தியது.

கூட்டத்தின் நடைமுறைகள் மொழி பெயர்ப்பின்றித் தொடர்ச்சியாகச் சிங்கள மொழியில் இடம்பெற்று வந்ததைக் கண்டு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடும் சீற்றமடைந்தார். தனது ஆசனத்தில் இருந்து எழுந்த அவர், இத்தகைய முறையற்ற செயற்பாட்டிற்குத் தனது வன்மையான கண்டனத்தை வெளியிட்டார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் கள், அரச திணைக்கள அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகளில் பெரும்பாலானோர் தமிழ் பேசுபவர்கள் என்பதை ரவிகரன் எம்.பி இதன்போது சுட்டிக் காட்டினார்.

தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக உள்ள ஒரு மாவட்டத்தில், மொழி பெயர்ப்பின்றி நீண்ட நேரமாகச் சிங்கள மொழியில் மட்டும் கலந்துரையாடுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது எனத் தெரிவித்த அவர், உடனடியாகத் தமிழ் மொழிமூலமான மொழிபெயர்ப்பை வழங்குமாறு கோரினார்.

பாராளுமன்ற உறுப்பினரின் இந்தத் திட்டவட்டமான கோரிக்கையைத் தொடர்ந்து, வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ் மொழி பெயர்ப்பாளர்கள் நியமிக்கப்பட்டு, இரு மொழிகளிலும் கலந்துரையாடல்கள் சீராக முன்னெடுக்கப்பட்டன. (ம-7)

## பழ...

அனைத்து தரப்பினரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்கெனவே இருக்கின்ற பயங்கரவாத தடைச் சட்டத்தினால் தமிழ் மக்களே பல்வேறு பாதிப்புக்களை எதிர்நோக்கி வந்திருக்கின்றனர். அதனால் இந்தச் சட்டத்தையே நீக்க வேண்டுமென பல்வேறு தரப்பினர்களும் கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## பயங்கரவாதத் தடைச்...

தவிசாளர் தியாகராசா பிரகாஷ் தலைமையில் நேற்று (26) இடம்பெற்றது.

இதன்போது குணராஜா டெனிஸ் கமல்ராஜாவால் பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு எதிரான பிரேரணை சபையில் முன்வைக்கப்பட்ட நிலையில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவுடன் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. (ம-7)

## பயங்கரவாதச்...

வரப்படவுள்ள புதிய சட்டங்களுக்கு எதிராக கையெழுத்துப் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

உத்தியோகபூர்வ முடிவுகள்
26.02.2026 வெற்றி வாரம் 0825
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 6 0 7 9 2 9
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22,328,493.60
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3091
சீட்டிழுப்பு திகதி 2026.02.26
தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 10 17 40 67 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.102,052,258.40
DLB

சனிதா
திகதி 26.02.2026 வெற்றி வாரம் 5252
வெற்றி இலக்கங்கள் 03 57 64 76 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,627,815.20
DLB

சசிரி
வெற்றி வாரம் 921
சீட்டிழுப்பு திகதி 26.02.2026
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 09 10 35
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 4,147,360.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4803
சீட்டிழுப்பு திகதி 26.02.2026
தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 01 05 25 26 துலாம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 17 01 32 53 54
சீட்டிழுப்பு வாரம் 2267
26.02.2026 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.163,839,960.00
DLB

அட கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2917
சீட்டிழுப்பு திகதி: 2026.02.26
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.94,431,928.80
வெற்றி இலக்கங்கள் 41 42 44 51 P
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணப்பெண் தேவை

01.காரைநகர், இந்து, 1994, மகம், MSc University of South wales UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(52246)
02.சுழிபுரம், இந்து, 1991, சதயம், BBA, Masters of global business Management (UK), UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(53902)
03.இணுவில், இந்து, 1994, திருவோணம், Bachelor of Civil Engineering, Civil Engineer, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54449)
04.அளவெட்டி, இந்து, 1993, விசாகம், BSc Engineering (Australia), Engineer, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (55831)
05.மாவிட்டபுரம், இந்து, 1997, அவிட்டம், BSc (Hons), Master Degree in MBA, Civil Engineer, Canada Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(57579)
06.கந்தரோடை, இந்து, 1991, BSc in Civil Engineering, Project Manager, Singapore Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(57742)
07.புங்குடுதீவு, இந்து, 1995, பரணி, BSc Bio Medical Science, HR, Canada Citizen, மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (49598)
08.வேலணை, இந்து, 1987, ஆயிலியம், IT Engineering (India) UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(53916)
09.கொக்குவில், இந்து, 1989, சதயம், BSc (Hons), Quantity Surveying (University of Moratuwa)மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(54656)
10.கொக்குவில், இந்து, 1992, அனுஷம், ACCA, BBA, BSc, LLM, Ass Director, UK Citizen, Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34763)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். Unmarried, Divorce என்பன உண்டு. (2090)

S.Sharma J.P | 077 539 3728
www.thaalee.com | 077 992 1494

# மார்ச் 3 ஆம் திகதி முதல் பாராளுமன்ற அமர்வு

(கொழும்பு)

பாராளுமன்றம் மார்ச் 03ஆம் திகதி முதல் 06ஆம் திகதி வரை கூடவிருப்பதாகப் பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார்.

கடந்த 18ஆம் திகதி சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன அவர்களின் தலைமையில் கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது பற்றிய தீர்மானம் எடுக்கப்பட்டது.

இதற்கு அமைய மு.ப 10.00 மணி முதல் மு.ப 11.00 மணிவரை வாய் மூல விடைக்கான கேள்விகளுக்காகவும், மு.ப 11.00 மணி முதல் மு.ப 11.30 மணி வரை நிலையியற் கட்டளை 27(2) கீழான கேள்விகளுக்காகவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (ம-7)

தமிழ் மொழி மூலம் / English Medium
A/L 2028
கணக்கீடு
KBK ACCOUNTING
MR.BALAKAJEN SLTS
RESOURCE PERSON
B.com(Jaf), H.N.Dip.in.Acc(ATI), Dip.in.Edu(OUSL), M.com(Hons),Acc.spl
ஆரம்பம்
02.03.2026 திங்கள் 03.00 Pm
Tamil Medium 03.00 - 04.00 Pm | English Medium 03.00 - 04.00 Pm
புதிய பிரிவுகள் ஆரம்பம்
A/L 2026, 2027
மாணவர்களுக்கு தேவையான புதிய தேர்ச்சியுடன்
KBK
கந்தர்மடம் 077 452 0043
(C-5063)

NEC
Empowering Educators to Inspire Students
பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம்.
யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்களின் வழிகாட்டலில்
A/L 2028
கலை & வர்த்தகம்
ஆரம்பம்
காலம் - 02.03.2026 MONDAY
நேரம் - காலை 09:30 மணி
தனிப்பாட அனுமதி வழங்கப்படும்
அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்
CONTACT FOR | 0765350999 | 0755350958
(C-5069)

பொருளியற் கல்லூரி
நாவலர் வீதி, யாழ்ப்பாணம். | K.K.S வீதி, சுன்னாகம்.
BARATHY
பிரதான வீதி, சித்தன்கேணி (சிவன் கோயில் அருகில்)
A/L 2028
கலை - வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் : பௌர்ணமி நன்நாளில் 02.03.2026 திங்கள்
யாழில் : 8.00 am
சுன்னாகம் : 2.00 Pm
சித்தன்கேணி : 12.00 pm
உங்கள் அனுமதிகளை சனி, ஞாயிறு தினங்களில் பெற்றுக் கொள்ளவும்.
யாழ். நகரில் - 077 220 9651
சுன்னாகத்தில் - 075 916 0417
சித்தன்கேணியில் - 077 169 2446
(C-5065)

## வேலையாட்கள் தேவை

வவுனியாவில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.
076 889 1308
077 606 1333
(2084)

## வீட்டுப்பணிப்பெண் தேவை

யாழ். நுணாவில் பகுதியில் அமைந்துள்ள வீடொன்றிற்கு சகல வேலைகளும் செய்யக் கூடிய 35 - 40 வயதிற்குட்பட்டோர் தேவை. தங்கியிருந்து வேலை செய்ய வேண்டும்.
சம்பளம் : 40,000 - 60,000
077 124 8425
077 196 6541
(6925)

## இலங்கையில் இருந்து கனடாவிற்கு


கப்பல் மூலம் பொதிகளை அனுப்ப



10-19 Kg - 1000/Kg
20-49 Kg - 900/Kg
50Kg இற்கு மேல் - 800/Kg
DELIVERY ▶ 2-3 Months
எமது நேரடி கிளைகள்: திருகோணமலை, வவுனியா, கொழும்பு, மட்டக்களப்பு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி, கோப்பாய், சுன்னாகம், கொடிகாமம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம், சங்கானை, மானிப்பாய், புத்தூர், பண்டத்தரிப்பு, நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை
(C-5067)
V2 TRAVELS 076 822 6244 076 455 0672

# மரண அறிவித்தல்

தோற்றம் 21 - 02 - 1966



மறைவு 25 - 02 - 2026

## கந்தவனம் விஷ்ணுகோபால்

வடமராட்சி கொற்றாவத்தையைப் பிறப்பிடமாகவும் தையிட்டி வடக்கு மயிலிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தவனம் விஷ்ணுகோபால் அவர்கள் கடந்த (25.02.2026) புதன்கிழமை அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தவனம் - பாக்கியம் தம்பதியரின் அன்புப் புதல்வனும் காலஞ்சென்றவர்களான செல்லையா - ராணி தம்பதியரின் மருமகனும் கோபிகா, நிஜகோபன் (கோபி) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நந்தகோபால் மற்றும் முருகானந்தகோபால், இரட்ணகோபால், நிர்மலாதேவி, சாரதாதேவி, பத்மாதேவி, பாமாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.02.2026) வெள்ளிக்கிழமை காலை 08.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆவளை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தையிட்டி வடக்கு, மயிலிட்டி. (2093)
076 902 0257
076 277 1417
தகவல்: குடும்பத்தினர்

NEW SCIENCE WORLD
VICTORY MUST

# NEW SCIENCE WORLD

## கணித விஞ்ஞானப் பிரிவு

## A/L 2028 Batch

## Tamil & English Medium

நேரடி வகுப்புக்கள் மற்றும் ZOOM இன் ஊடான வகுப்புக்கள்

பௌதிகவியல் - திரு.R.குமரன், திரு.R.குகன்
இரசாயனவியல் - திரு.டயஸ், திரு.K.T.சிவகுமார்
உயிரியல் - N.T.கஜேந்திரன்
I.C.T - திரு.T.லவேந்திரன்
இணை.கணிதம் - திரு.S.S.செந்தில்ராஜ், திரு.V.ஹரிகரன்

ஆரம்பம் : 01.03.2026 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம் : 09.30 a.m
அனுமதிகளை 27.02.2026 (வெள்ளிக்கிழமை) பி.ப 12.30 மணியிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
மேலதிக விபரங்களுக்கு : 021 221 6690, 077 336 4055
(C-5064)

NEW SCIENCE WORLD
Navalar Road, Brown Road Junction, Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.101, [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 27.02.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.